www.lkedu.lk

கற்றல் கையேடு

புவியியல்

தரம் 10

- 2015 முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்திற்கமைவானது.
- பாடநூல், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி என்பவற்றிற்கேற்ப தயாரிக்கப்பட்டது.

நா.செல்வச்சந்திரன்

ஆக்கம் :- நா.செல்வச்சந்திரன்

ஆசிரியர் யா/அராலி இந்துக் கல்லூரி.

zoom Online
வகுப்புக்கள்

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk || www.lkedu.lk
76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை



" தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் "

PRIMARY

- தமிழ்
- நுண்ணறிவு
- கணிதம்
- பேச்சு சிங்களம்
- சுற்றாடல்
- பேச்சு ஆங்கிலம்





SECONDARY

- ICT
- MATHS
- ENGLISH
- TAMIL
- HISTORY
- SCIENCE

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் I தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன

76667-4945

www.lkedu.lk

அலகு 01

புவியின் சேர்க்கை (பாடவேளை 12)

01 ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்களுள் உயிரினங்கள் வாழக்கூடிய கோள் எது?

புவி

02 புவியில் உயிரினங்கள் வாழ்வதற்கான காரணங்கள் எவை?

- ✓ சுவாசிப்பதற்குத் தேவையான வளி இருத்தல்.
- ✓ நீர் இருத்தல்
- ✓ புவியூர்ப்புச் சக்தி இருத்தல்
- ✓ பொருத்தமான காலநிலை காணப்படல்

புவியின் சேர்க்கை / புவியின் தொகுதிகள்

03 புவியின் மேற்பரப்பின் பரப்பளவு எவ்வளவு?

510 மில்லியன் சதுர கிலோமீற்றர்

04 புவித்தொகுதியில் உள்ளடங்கும் நான்கு தொகுதிகளும் எவை?

1 கற்கோளம் / நிலக்கோளம்

2 நீர்க்கோளம்

3 வளிக்கோளம்

4 உயிரிக்கோளம்

நா.செல்வச்சந்திரன்

05 புவித்தொகுதிகளுக்கிடையில் நிலவும் இடைத்தொடர்புகள் எவை?

1 நீர்க்கோளத்திலுள்ள நீர் நிலைகளில் இருந்தும் தாவரங்களிலிருந்தும் நீர் ஆவியாகி வளிக்கோளத்தை அடைகின்றது.

2 மீண்டும் இந்நீரானத படிவு வீழ்ச்சி மூலம் புவியை வந்தடைகின்றது.

3 நீர், வளி, நிலம் சேர்வதனால் உயிர்க்கோளத்தின் உயிர்ச்சூழல் உருவாக்கப்படுகின்றது.

www.lkedu.lk

கற்கோளம்

06 கற்கோளம் என்றால் என்ன?


புவியோடு மற்றும் மேல் மூடியினை உள்ளடக்கிய வலயம் கற்கோளம் எனப்படும்.

07 கற்கோளத்தில் அமைந்து காணப்படுபவை எவை?

1 கண்டங்கள்

2 சமுத்திரங்கள்

08 கற்கோளத்தின் அடிப்படையில் கற்கோளத்தின் இரண்டு பகுதிகளும் எவை?



09 மனிதச் செயற்பாடுகளில் பெரும்பாலானவை இடம்பெறும் பகுதி எது?

கற்கோளம்

© செல்வச்சந்திரன்

10 மனிதன் தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள பயன்படுத்தும் கற்கோளத்தின் இரு வகையான வளங்களும் எவை?

1 உயிருள்ள வளங்கள்

2 உயிரற்ற் வளங்கள்

11 கற்கோளத்தினால் மனிதன் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் எவை?

1 கனியவளங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.

2 குடியிருப்புக்களை அமைத்தல்

3 விவசாய நடவடிக்கைகள்

4 கைத்தொழில் நடவடிக்கைகள்

5 சுற்றுலா நடவடிக்கைகள்

www.lkedu.lk

12 கற்கோளத்தில் உள்ள வளங்களை பயன்படுத்தும் போது கற்கோளத்திற்கு ஏற்படும் பாதிப்புக்கள் எவை?

1 கனிய வளங்களைப் பெறுவதற்காக நிலங்களை அகழ்வதால் நிலம் தரமிழத்தல்.

2 காடுகளை அழிப்பதால் மண்ணரிப்பு ஏற்படுதல்.

3 மாடிக் கட்டடங்கள், பாரிய நீர்த்தேக்கம் என்பவற்றின் அமைப்பினால் சமநிலை பாதிக்கப்படுதல்.

4 தரைக்கீழ் நீர் மட்டம் குறைவடைதல்

5 மேற்பரப்பு நிலத்தோற்றம் மாற்றமடைதல்.

13 சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் மனித நடவடிக்கைகள் எவை?

1 வீட்டுக்கழிவுகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் முறையற்ற விதத்தில் வெளியேற்றப்படுதல்.

2 விவசாயத்தில் களைகொல்லிகள், கிருமிநாசினிகள், இரசாயன உரங்கள் என்பவற்றைப் பயன்படுத்தல்.

நா. செல்வச்சந்திரன்

3 வரையறையற்ற முறையில் வளங்களை அகழ்தல்.

4 காடுகளை அழித்தல்.

5 பாரிய அடுக்கு மாடிக் கட்டடங்கள், பாரிய நீர்த்தேக்கங்கள் என்பவற்றை அமைத்தல்.

14 சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைத்துக் கொள்வதற்கான வழிமுறைகள் எவை?

1 வீட்டுக்கழிவுகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் முறையான விதத்தில் வெளியேற்றப்படுதல்.

2 விவசாயத்தில் இரசாயன பொருட்களின் பயன்பாட்டைக் குறைத்தல்.


3 கனியங்களை அகழ்வது தொடர்பாக சட்டங்களை இயற்றுதலும் நடைமுறைப்படுத்தலும்.

4 காடுகளை அழித்தலை குறைத்தலும் மீள் வனமாக்கலும்

5 பாரிய அடுக்கு மாடிக் கட்டடங்கள், பாரிய நீர்த்தேக்கங்கள் என்பவற்றை அமைக்கும் போது சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்களை கவனத்தில் கொள்ளல்.

www.lkedu.lk

15 கற்கோளத்தின் கட்டமைப்பினை வரைக?



வளிக்கோளம்

16 வளிக்கோளம் என்றால் என்ன?

புவியைந் சூழ்ந்து காணப்படும் பல்வேறு வகையான வாயுக்களை உள்ளடக்கிய மெல்லிய படை வளிமண்டலமாகும்.

17 வளி மண்டலம் புவியுடன் இணைந்து காணப்படுவதற்கான காரணம் யாது?

புவியின் ஈர்ப்பு சக்தி

18 வளி மண்டலத்தின் முக்கிய படை புவி மேற்பரப்பிலிருந்து எத்தனை கிலோ மீற்றர் வரை பரந்துள்ளது?

120 கிலோ மீற்றர்

நா.செல்வச்சந்திரன்

19 மொத்த வளி உள்ளடக்கத்தில் 50வீத வாயுக்கள் புவி மேற்பரப்பிலிருந்து எத்தனை கிலோ மீற்றர் வரை பரந்துள்ளது?

5 – 6 கிலோ மீற்றர்

20 வளி மண்டலத்தின் முக்கியத்துவங்கள் எவை?

1 உயிர்கள் சுவாசித்தலுக்குத் தேவையான ஒட்சிசன் வாயுவை வழங்குதல்.

2 ஒளித்தொகுப்புச் செயற்பாட்டிற்குத் தேவையான காபனீரொக்சைட்டை வழங்குதல்.

3 புற ஊதாக்கதிர்கள் புவியை அடைவதைத் தடுத்தல்.

4 படிவு வீழ்ச்சிச் செயற்பாடுகளுக்கு உதவுதல்.

www.lkedu.lk

21 வளி மண்டலத்தில் காணப்படும் முக்கிய வாயுக்களையும் அவற்றின் அளவுகளையும் குறிப்பிடுக?

நைதரசன்	78.09
ஒட்சிசன்	20.95
ஆகன்	0.93
காபனீரொக்சைட்டு	0.03

22 மனிதச் செயற்பாடுகள் காரணமாக வளிமண்டலத்தை அடையும் மாசடைந்த வாயுக்கள் எவை?

1 காபனீரொக்சைட்டு 2 மெதேன் 3 காபன் மொனோ ஒக்சைட்

4 சல்பர் ஒக்சைட்

23 வளி மண்டலத்தில் காணப்படும் பிரதான நான்கு படைகளும் எவ்வடிப்படையில் பிரிக்கப்படுகின்றன?

1 உயரத்தின் அடிப்படையில் 2 வெப்பநிலையில் ஏற்படும் மாற்றம்

நா. செல்வச்சந்திரன்


24 வளி மண்டலத்தில் காணப்படும் பிரதானமான நான்கு படைகளும் எவை?

1 மாறன் மண்டலம்

2 படை மண்டலம்

3 இடை மண்டலம்

4 வெப்ப மண்டலம்



மாறன் மண்டலம்

25 மாறன் மண்டலத்தின் முக்கிய இயல்புகள் எவை?

1 புவி மேற்பரப்பிலிருந்து 8 – 12 கி.மீ வரை பரந்துள்ளது

2 கடல் மட்டத்திலிருந்து மேலே செல்லச் செல்ல

ஒவ்வொரு 1000 மீற்றருக்கும் 6.4^0 C வீதம் வெப்பம் குறைவடையும். இது வெப்ப நழுவு வீதம் எனப்படும்.

3 படிவு வீழ்ச்சி, வெப்பநிலை, அமுக்கம், காற்று, ஈரப்பதன் முகில்களின் உருவாக்கம் ஆகிய தோற்றப்பாடுகள் இடம்பெறுகின்றன.

www.lkedu.lk

4 உயிர்க்கோளத்தின் நிலைத்திருப்பிற்கு மிகவும் அவசியமானது.

5 இதன் உயர் எல்லைக்கு அருகில் சாதாரண விமானங்கள் பயணம் செய்யும்.

6 இதன் மேல் எல்லை மாற்றரிப்பு எனப்படும்.

படை மண்டலம்

26 படை மண்டலத்தின் முக்கிய இயல்புகள் எவை?

1 கடல் மட்டத்திலிருந்து 48 – 50 கி.மீற்றர் வரை பரந்துள்ளது.

2 மேலே செல்லச் செல்ல வெப்பநிலை அதிகரித்துச் செல்லும்.

3 உயிர்க்கோளத்தின் நிலைத்திருப்பிற்குத் தேவையான ஓசோன் படை 20 – 30 கி.மீற்றர் வரை பரந்துள்ளது.

4 இப்படை சூரியனிலிருந்து வருகின்ற புற ஊதாக்கதிர்களை உறிஞ்சிக் கொள்கிறது.

5 இப்பகுதியில் வெப்பநிலை அதிகரிப்பிற்கு ஓசோன் படை செல்வாக்குச் செலுத்தும்.

6 விண்கற்களில் பெரும்பாலானவை இப்பகுதியிலேயே அழிவடைகின்றது.

7 அதிவேக ஜெட் விமானங்கள் இப்பகுதியில் பயணம் செய்யும்.

8 இதன் மேல் எல்லை படைத்தரிப்பு எனப்படும்.

இடை மண்டலம்

27 இடை மண்டலத்தின் இயல்புகள் எவை?

1 கடல் மட்டத்திலிருந்து 80 கிலோ மீற்றர் உயரம் வரை பரந்துள்ளது.

2 உயரத்திற்கேற்ப வெப்பம் படிப்படியாகக் குறைவடையும்.

3 நீராவி, தூசுத் துணிக்கைகள்ஈ முகில்கள் என்பன இல்லை.

4 வளி மண்டலத்தின் மிகத் தாழ்ந்த வெப்பநிலை காணப்படும்.

5 மின்னியக்கச் செயற்பாடுகள் அதிகம் இடம்பெறும்.

6 இதன் மேல் எல்லை இடைத்தரிப்பு எனப்படும்.

www.lkedu.lk

வெப்ப மண்டலம்

28 வெப்ப மண்டலத்தின் இயல்புகள் எவை?

1 இதன் மேல் எல்லை 120 கிலோ மீற்றர் வரை பரந்துள்ளது.

2 உயர்திற்கேற்ப வெப்பநிலை விரைவாக அதிகரித்துச் செல்லும்.

3 இப்பகுதி அதிக வெப்பத்தைக் கொண்டது.

4 இரவு பகல் வெப்பநிலையில் பாரிய வேறுபாடு காணப்படும்.

29 வளி மண்டலம் மாசடைவதற்குக் காரணமான மனிதச் செயற்பாடுகள் எவை?

1 கைத்தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் புகைகள்

2 வாகனங்களிலிருந்து வெளியேறும் புகைகள்

3 அதிகளவில் இடம்பெறும் விண்வெளிப் பயணங்கள்

4 நச்சு வாயுக்களை வெளிப்படுத்தும் செய்றபாடுகளை மெற்கொள்ளல்.

30 வளி மண்டலம் மாசடைவதைத் தடுக்கும் வழிகள் எவை?

1 கைத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகையைக் கட்டுப்படுத்தல்.

2 புகைக்கும் வாகனங்களை தடைசெய்தல்.

நா. செல்வச்சந்திரன்

3 பாதுகாப்பான முறையில் விண்டிவளிப் பயணங்களை மேற்கொள்ளல்.

4 நச்சு வாயுக்கள் சேர்வதைக் கட்டுப்படுத்துதல்.

நீர்க்கோளம்

31 நீர்க்கோளம் என்றால் என்ன?

புவி மேற்பரப்பில் பல்வேறு வடிவங்களில் (திண்மம், திரவம், வாயு) காணப்படும் அனைத்து நீர் நிலைகளும் நீர்க்கோளம் எனப்படும்.

32 புவியின் மொத்த நீரின் கொள்ளளவு எவ்வளவு?

1386 கியுபிக் கிலோமீற்றர்

33 நீரின் முக்கியத்துவங்கள் எவை?

1 மக்களின் அன்றாடத் தேவைகளுக்கு 2 விவசாயம்

3 கைத்தொழில் 4 போக்குவரத்து 5 விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு

www.lkedu.lk

34 புவியில் நீர் பரம்பியுள்ள முறைகள் எவை?

1 சமுத்திர நீர் - சமுத்திரம் மற்றும் கடல்கள் (97.5 வீதம்)

2 மேற்பரப்பு நீர் - ஆறுகள், கால்வாய், ஏரிகள், மற்றும் நீர்த்தேக்கங்கள்

3 தரை நீர் - தரைக்கீழ் நீர்

4 வளி மண்டல நீர் - வளிமண்டல ஈரப்பதன்

5 மண்ணீர் - மண்ணில் உள்ள நீர்)

35 உலகில் உள்ள நீரில் மனிதனுக்குப் பயன்படுத்தக்கூடிய நீரின் அளவு எவ்வளவு?

1வீதம்

36 நீரின் தரம் குறைவடைந்து வருவதற்கான காரணங்கள் எவை?

1 கைத்தொழிற்சாலைகளின் கழிவுகள் நீருடன் கலத்தல்.

2 விவசாயத்தில் கிருமி கொல்லிகள், களை கொல்லிகள் போன்ற இரசாயனப் பொருட்கள் நீருடன் கலத்தல்.

3 இறந்த விலங்குகளை நீரில் வீசுதல்.

4 வாகனங்களை நீர் நிலைகளில் கழுவுதல்.

5 வீட்டுக் கழிவுகள் நீருடன் கலத்தல்.

நா. செல்வச்சந்திரன்

37 நீர் மாசடைவதைத் தடுப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் எவை?

1 கைத்தொழிற்சாலைகளின் கழிவுகள் நீருடன் கலத்தலை தடுத்தல்.

2 விவசாயத்தில் கிருமி கொல்லிகள், களை கொல்லிகள் போன்ற இரசாயனப் பொருட்களின் பாவனையைக் குறைத்தல்.

3 இறந்த விலங்குகளை நீரில் வீசுதலைத் தவிர்த்தல்.

4 வாகனங்களை நீர் நிலைகளில் கழுவுதலைத் தடுத்தல்.

5 வீட்டுக் கழிவுகள் நீருடன் கலத்தலைத் தடுத்தல்

www.lkedu.lk

38 நீரியல் வட்டத்தில் இடம்பெறும் செயற்பாடுகள் எவை?

- படிவு வீழ்ச்சி - மழைவீழ்ச்சியும் உறைபனி வீழ்ச்சியும்
- வழிந்தோடுதல் - மேற்பரப்பில் வடிந்தோடல் (கழுவு நீரோட்டம்)
- ஊடு வடிதல் - புவியினுள் பொசிதல் மூலம் நீர் நிலக்கீழ் நீர்
- தேங்குதல் - நதி, ஓடை, குளம், ஏரி, கடல்
- ஆவியாதல் - மேற்பரப்பினிலுள்ள நீர் ஆவியாகி வளி மண்டலத்தில் சேர்தல், தாவரங்களிலிருந்து நீர் ஆவியுயிர்ப்பின் மூலம் வளிமண்டலத்தில் சேர்தல்
- ஒடுங்குதல் - நீராவி திரட்சியடைந்து முகில்/ நீர்த்துளிகள் உருவாதல

உயிர்க்கோளம்

39 உயிர்க்கோளத்தின் செயற்பாடுகளைத் பாதிக்கும் இரண்டு காரணிகளும் எவை?

1 உயிருள்ள கூறுகள் - தாவரங்கள், விலங்குகள், பிரிகையாக்கிகள்

2 உயிரற்ற கூறுகள் - சூரியசக்தி, மண், நீர், காற்று)

40 உயிர்க்கோளத்தின் எல்லைகள் எவை?

நா. வேல்வச்சந்திரன்

1 கற்கோளம் - தாவரங்களின் வேர்த் தொகுதிகள் மற்றும் மண் அங்கிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய படை(மண்ணினுள் ஏறக்குறைய 2.5 மீற்றர்)

2 நீர்க்கோளம் - ஒளித்தொகுப்புச் செயற்பாட்டுக்குத் தேவையான சூரிய ஒளி ஊடுருவுகின்ற பகுதி வரை

3 வளி மண்டலம் - பறவைகள் பறந்து செல்கின்ற ஆகக்கூடிய எல்லை(5000 மீற்றர்)

41 மனிதனின் நிலைத்திருப்பிற்கு அவசியமான ஒளித்தொகுப்புச் செயற்பாடு எங்கு இடம்பெறும்? உயிர்க்கோளம்

42 உயிர்க்கோளத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் மனிதச் செயற்பாடுகள் எவை?

1 வரையறையின்றி வளங்களைப் பயன்படுத்துதல்.

2 பாரிய கட்டடங்களை அமைத்தல்.

3 திண்மக்கழிவுகளை முறையற்ற விதத்தில் வெளியேற்றுதல்.

4 அணு குண்டு பரிசோதனைகளை மேற்கொள்ளுதல்.

5 காடுகளை அழித்தல்

www.lkedu.lk

43 உயிர்க்கோளம் பாதிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள் எவை?

1 உயிர்ப் பல்வகைமை பாதிக்கப்படுதல்.

2 சூழல் சமநிலை குன்றுதல்.


3 மண் வளமிழத்தல்


4 மண்ணரிப்பு ஏற்படுதல்.

5 உயிர்த்தொகுதிகள் அழிவுக்குள்ளாதல்.

புவியின் அமைப்பு

44 புவியின் அமைப்பில் உள்ளடங்கும் மூன்று படைகளும் எவை?





ஓடு

45 புவியோட்டின் முக்கிய இயல்புகள் எவை?

1 புவியின் மொத்த நிலத் திணிவில் 1 சதவீதமாகக் காணப்படும்.

2 இப்படை கற்கோளத்திற்குரியதாகும்.

3 சமுத்திரப் பகுதிகளில் இதன் தடிப்பு 5 கிலோ மீற்றர் வரையும், கண்டப் பகுதிகளில் 60 கிலொ மீற்றர் வரையான ஆளத்தையும் கொண்டிருக்கும்.

4 பாறைகளையும் பல்வேறு கனியங்களையும் கொண்டுள்ளது.

5 புவியோட்டின் மெல்லிய மேற்படை மண்ணால் ஆனது.


www.lkedu.lk

6 பாறைகளின் அடர்த்தி, அமைப்பு மற்றும் அமைவிடம் அடிப்படையில் இது இரண்டு வகைப்படும்.

1 கண்ட ஓடு(சீயல் படை) – கருங்கற் பாறைகளைக் கொண்டுள்ளது. இது சிலிக்காவையும்(SI), அலுமினியத்தையும்(Al) அதிகம் கொண்டிருப்பதால் சீயல்(Sial) படை எனப்படும்.

2 சமுத்திர ஓடு(சீமாப் படை) – எரிமலைக் குழம்புப் பாறைகளைக் கொண்டுள்ளது. இது சிலிக்காவையும்(SI), மக்னிசியத்தையும்(Mag) அதிகம் கொண்டிருப்பதால் சீமாப்(Sima) படை எனப்படும

7 புவியோட்டிலிருந்து மூடியைப் பிரிக்கும் எல்லை மோகோறோவிசிக் தொடர்ச்சியின்மை எனப்படும்.



நா.

மூடி

46 மூடியின் இயல்புகள் எவை?

1 புவியோட்டிற்கும் மையத்திற்கும் இடையில் அமைந்துள்ளது.

2 புவியின் மேற்பரப்பிலிருந்து 2900 கிலோ மீற்றர் ஆழம் வரை விரிவடைந்துள்ளது.

3 மொத்த நிலத்திணிவில் 2/3 பங்காகும்.

4 மேற்பகுதி ஒலிவின் மற்றும் சிலிக்கேற்றைக் கொண்டது.


5 கீழ்ப் பகுதி மக்னிசியம் மற்றும் சிலிக்கேற்றைக் கொண்டது.

6 பாறைகள் மற்றும் இரசாயனச் சேர்க்கையினால் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

1 மேல் மூடி 2 கீழ் மூடி

www.lkedu.lk

7 மையத்திலிருந்து மூடியை வேறுபடுத்தும் எல்லை கூற்றன்பேர்க் தொடர்ச்சியின்மை எனப்படும்.



மையம்

47 மையத்தின் இயல்புகள் எவை?

நிஷேல்வச்சந்திரன்


1 மூடியின் கீழ் அமைந்துள்ள பகுதியாகும்.

2 சேர்க்கையின் அடிப்படையில் இரண்டு பகுதிகளாகக் காணப்படும்.

1 வெளி மையம் - திரவ உலோகங்களால்(நிக்கல் மற்றும் இரும்பு) ஆனது. இது மூடியிலிருந்து 2250 கிலோ மீற்றர் வரை பரந்துள்ளது.

2 உள் மையம் - தடிப்பான உலோகப்படையைக் கொண்டது. வெளி மையத்திலிருந்து 1220 கிலோ மீற்றர் வரை விரிவடைந்துள்ளது.

புவித் தகடுகள்



www.lkedu.lk

48 பிரதான புவித் தகடுகள் எவை?

1. பசுபிக் தகடு 2. வட அமெரிக்க தகடு 3. தென்னமெரிக்க தகடு
4. ஆபிரிக்க தகடு 5. யுறேசிய தகடு 6. இந்து அவுஸ்திரேலிய தகடு
7. அண்டாட்டிக் தகடு

48 சிறிய புவித் தகடுகள் எவை

1 கறீபியன் தகடுகள் 2 கோகாஸ் தகடுகள் 3 நெஸ்கா தகடுகள்
4 பிலிப்பைன் தகடு 5 ஸ்கோசியா தகடு 6 அராபியன் தகடு

7 நாஸா தகடு

49 புவித்தகடுகள் எவ்வாறு நகர்கின்றன?

மேற்காவுகை ஓட்டத்தால்

50 புவித்தகடுகள் அசைவதால் ஏற்படும் விளைவுகள் எவை?

1 சுனாமி 2 நிலநடுக்கம் 3 எரிமலை வெடிப்பு 4 மண்சரிவு

நா.செல்வச்சந்திரன்

www.lkedu.lk

அலகு 02

புவியின் பிரதான பௌதிகப் பண்புகள் (பாடவேளை 10)

01 புவியின் பிரதான பௌதீகப் பண்புகள் எவை?

தரைத்தோற்றம், காலநிலை

02 புவி மேற்பரப்பில் அவதானிக்கக்கூடிய பௌதிக அம்சங்கள் எவை?

குன்றுகள், மலைகள், மலைத்தொடர்கள், மேட்டுநிலங்கள்

கண்டங்கள்

03 கண்டங்கள் என்றால் என்ன?

சமுத்திர நீர்ப்பரப்பிலிருந்து உயர்ச்சியடைந்தள்ள பரந்த நிலப்பரப்பாகும். இது 29சதவீதமாகும்.

04 உலகில் காணப்படும் கண்டங்களை பருமன் அடிப்படையில் ஒழுங்கு முறையில் குறிப்பிடுக?


ந. செல்வச்சந்திரன்

ஆசியா, ஆபிரிக்கா, வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா, அந்தாட்டிக்கா, ஐரோப்பா, அவுஸ்ரேலியா

05 கண்டமேடை என்றால் என்ன?

கண்டங்களின் எல்லையிலிருந்து சமுத்திரத்தை நோக்கி பரந்துள்ள ஆழம் குறைந்த கடற்பரப்பாகும்.

06 கண்டமேடைகளுக்கு உதாரணம் தருக?



வோர்ச் கடலடித்தள மேடை,

பீதுறு கடலடித்தள மேடை

07 கண்டச்சாய்வு என்றால் என்ன?

கண்டமேடையின் விளிம்பிலிருந்து சமுத்திரத்தை நோக்கி சாய்வாக அமைந்துள்ள நிலப்பகுதியாகும்.

www.lkedu.lk

தீவுகள்

08 தீவுகள் என்றால் என்ன?

நான்கு பக்கமும் நீரினால் சூழப்பட்ட பல்லுருவ அமைப்பில் காணப்படும் சிறிய நிலப்பரப்பாகும்.

09 ஆசியாக் கண்டடையில் அமைந்துள்ள தீவுகள் எவை?

போர்னியோ, ஜாவா, சுமத்திரா, இலங்கை

10 அவுஸ்ரெலியா கண்டமேடைக்குள் அமைந்துள்ள தீவுகள் எவை?

பப்புவா நியூகினி, தஸ்மேனியா

11 ஆபிரிக்க கண்டமேடைக்குள் அமைந்துள்ள தீவு எது? மடகாஸ்கார்.

12 ஆழமான சமுத்திரத்தில் அரிமலைச் செயற்பாடுகளால் உருவான தீவுகள் எவை?

ஹவாய், ஐஸ்லாந்து

நா.செல்வச்சந்திரன்

13 இலங்கைக்கு உரித்தான தீவுகள் எவை? நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு

14 தீவாக அமைந்திருப்பதால் ஏற்படும் நன்மைகள் எவை?

1 மீன்பிடிக் கைத்தொழில் சிறப்பாக இருக்கும்.

2 சுற்றுலாப் பயணகளின் வருகை

3 துறைமுக வசதிகள் 4 வெப்பநிலை கட்டுப்படுத்தப்படல்

15 தீவாக அமைந்திருப்பதால் ஏற்படும் தீமைகள் எவை?

1 கரையோரப் பகுதிகள் அரிக்கப்படுதல்

2 சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிப்பு ஏற்படல்

3 வெளிநாடுகளின் தலையீடுகள் ஏற்படுதல்.

www.lkedu.lk


சமுத்திரங்கள்

16 சமுத்திரங்கள் என்றால் என்ன?

புவியில் உவர் நீரால் நிறைந்த பாரிய நீர்ப்பரப்பாகும். இது 71 சதவீதமாகும்.

17 சமுத்திரங்களை பருமன் அடிப்படையில் எழுதுக?

பசுபிக் சமுத்திரம், அத்திலாந்திக் சமுத்திரம், இந்து சமுத்திரம், அந்தாட்டிக் சமுத்திரம், ஆட்டிக் சமுத்திரம்



18 சமுத்திர அகழி என்றால் என்ன?

சமுத்திரங்களில் காணப்படும் மிக ஆழமான பகுதி

19 உலகின் முக்கிய அகழிகள் எவை?

மரியான ஆகழி(11035 மீற்றர்), மின்டானோ அகழி(10497 மீற்றர்)

20 அதிகளவு அகழிகளைக் கொண்டுள்ள சமுத்திரம் எது? பசுபிக் சமுத்திரம்

நா.செல்வச்சந்திரன்

கடல்கள்

21 கடல்கள் என்றால் என்ன?

பகுதியாக அல்லது முழுவதும் நிலப்பகுதியினால் சூழப்பட்டு சமுத்திரங்களுடன் இணைந்து காணப்படும் உவர் நீரினைக் கொண்ட நீர்ப்பகுதிகள்

22 முழுதும் நிலத்தால் சூழப்பட்ட கடல்கள் எவை? கஸ்பியன்கடல், ஏரல்கடல்

23 பகுதியளவில் நிலத்தால் சூழப்பட்ட கடல்கள் எவை?

மத்தியதரைக்கடல், செங்கடல், கருங்கடல், மஞ்சள்கடல்

24 சமுத்திரத்துடன் இணைவைக் கொண்ட கடல்? அரபிக்கடல், சீனக்கடல்

25 சமுத்திரங்களையும், கடல்களையும் வளங்களாக மனிதன் பயன்படுத்தம் சந்தர்ப்பங்கள் எவை? போக்குவரத்து, மீன்பிடி, சுற்றுலா, பொழுதுபோக்கு, நீர்மின் உற்பத்தி

www.lkedu.lk

உலகப்படம் குறித்தற் பயிற்சி 01 – கண்டங்களும், சமுத்திரங்களும் குறித்தல்

உலகப்படம் குறித்தற் பயிற்சி 02 – தீவுகள் குறித்தல்

உலகப்படம் குறித்தற் பயிற்சி 03 – கடல்கள் குறித்தல்

மலைத்தொடர்கள்

26 மலைத்தொடர்கள் என்றால் என்ன?

பல்வேறு சிகரங்களையும் சாய்வுகளையும் கொண்ட உயர் எழுச்சிகளுடன் கூடியதாகப் பரந்துள்ள நிலத்தோற்றங்களாகும்.

27 மலைத்தொடர்களுக்கு உதாரணம் தருக?

வடஅமெரிக்கா – றொக்கி, அப்பலாச்சியன்

தென் அமெரிக்கா – அந்தீஸ்

ஆபிரிக்கா – அற்லஸ், டிரக்கன்பேர்க்

ஐரோப்பா – அல்ப்ஸ், அப்பனைன்

நா.தில்லைச்சந்திரன்

ஆசியா - இமயமலை

அவுஸ்ரேலியா – பெரிய பிரிப்பு மலைத்தொடர்

உலகப்படம் குறித்தற் பயிற்சி 04 – மலைகள் குறித்தல்

மேட்டுநிலங்கள்

28 மேட்டு நிலங்கள் என்றால் என்ன?

மலைப் பிரதேசங்களில் அமைந்துள்ள தட்டையான உயர் நிலங்கள்

29 கடல் மட்டத்திலிருந்து மிகவும் உயரத்தில் அமைந்துள்ள மேட்டு நிலங்கள் எவை?

திபெத், பமீர்

www.lkedu.lk

30 மேட்டுநிலங்களுக்கு உதாரணம் தருக?

வடஅமெரிக்கா – மெக்சிக்கோ மேட்டுநிலம்

தென் அமெரிக்கா – பிறேசிலியன் டேட்டுநிலம்

ஆபிரிக்கா – பீ மேட்டுநிலம்

ஆசியா – திபெத், பமீர், தக்கணம், ஈரான் மே.நி அரேபியா பீடபூமி, மொங்கோலிய மேட்டுநிலம்

31 இலங்கையில் அமைந்துள்ள மேட்டுநிலங்கள் எவை?

வெலிமடை, மகாவலத்தன்ன, கொஸ்லாந்தை, ஹட்டன்

உலகப்படம் குறித்தற் பயிற்சி 05 – மேட்டுநிலங்கள் குறித்தல்

சமவெளிகள்

32 சமவெளிகள் என்றால் என்ன?

நிரஞ்செல்வச்சந்திரன்

உயரம் குறைந்த மிகவும் பரந்த பிரதேசத்திலே வியாபித்துக் காணப்படும் தட்டையான

நிலமாகும்.

33 சமவெளிகளுக்கு உதாரணம் தருக?

வடஅமெரிக்கா – வடஅமெரிக்க பெரிய சமவெளி

ஐரோப்பா – வட ஐரோப்பிய சமவெளி

அவுஸ்ரேலியா – நுல்லைபார் சமவெளி

ஆசியா – சைபீரியச் சமவெளி, மஞ்சூரியச் சமவெளி, வடசீனச் சமவெளி, இந்து கங்கைச் சமவெளி

34 உருவாக்க முறையின் அடிப்படையில் சமவெளிகளின் வகைகள் எவை?

1 கரையோரச் சமவெளி 2 வண்டற் சமவெளி 3 பனிக்கட்டியாற்றுச் சமவெளி

www.lkedu.lk

35 உலகின் மலைப்பாங்கான, மற்றும் சமவெளிப் பிரதேசங்களில் இடம்பெறும் மானிட நடவடிக்கைகள் எவை?

1 படிக்கட்டு மறையில் நெற் பயிர்ச்செய்கை 2 தேயிலை, இறப்பர் பயிர்ச்சயெ்கை

3 மந்தை வளர்ப்பு 4 பொழுதுபோக்கு 5 நீர்மின் உற்பத்தி

உலகப்படம் குறித்தற் பயிற்சி 06 – சமவெளிகள் குறித்தல்

ஆறுகள்

36 ஆறுகள் என்றால் என்ன?

தெளிவான பள்ளத்தாக்குகளின் ஊடாக சமுத்திரம், ஏரி, வடிநிலம் , கடல் நோக்கிப் பாய்ந்து செல்லும் இயற்கையான நீர்

37 ஆறுகள் உற்பத்தியாகும் மூலங்களையும் அவற்றுக்கான உதாரணங்களையும் தருக?

ஊற்று – தேம்ஸ் நதி

ஏரி – நைல்நதி

உருகிய பனி – றைன்நதி

மலைப்பகுதி – மகாவலிகங்கை

நா.செல்வச்சந்திரன்

38 உலகின் முக்கிய ஆறுகளைத் தருக?

வடஅமெரிக்கா – மக்கன்சி நதி, மிசூரி மிசிசிப்பி

தென் அமெரிக்கா – அமேசன், பரான

ஆபிரிக்கா – நைல், கொங்கோ, நைகர் ஐரோப்பா – டன்யூப், வொல்கா

ஆசியா – ஒப், ஜென்சி, லீனா, அமுர், குவாங்கோ, இந்து, கங்கை, பிரம்மபுத்திரா

அவுஸ்ரேலியா – மறேடார்லிங்

www.lkedu.lk

உலகப்படம் குறித்தற் பயிற்சி 07 – ஆறுகள் குறித்தல்

ஏரிகள்

39 ஏரிகள் என்றால் என்ன?

நிலத்தில் காணப்படும் இறக்கங்களில் நன்னீர் நிறைந்து காணப்படுதலாகும்.

40 ஏரிகளுக்கு உதாரணம் தருக?

ஆசியா – பைக்கால் ஏரி, பல்காஸ் ஏரி

வடஅமெரிக்கா – ஐம்பெரும் ஏரிகள்(சுப்பீரியர், கூறன், ஈரி, ஒன்ரரியோ,

அவுஸ்ரேலியா – அயர் ஏரி

ஐரோப்பா – லடோகா ஏரி

தென் அமெரிக்கா – தித்திக்கா ஏரி

ஆபிரிக்கா – விக்டோரியா ஏரி,தங்கனிக்கா, சாட்

நா.செல்வச்சந்திரன்

41 உள்நாட்டுக் கடல்கள் என்றால் என்ன?

கடல் நீரினால் நிரப்பப்பட்ட பாரிய நீர்த்தேக்கமாக இருப்பவையாகும்.

42 உலகில் மிகப்பெரிய ஏரி எது? சுப்பிரியர்

43 உலகில் மிக உயரத்தில் அமைந்த ஏரி எது? தித்திக்கா

44 ஆறுகளும், ஏரிகளும் மனித நடிவடிக்கைகளில் பெறும் முக்கியத்துவங்கள் எவை?

போக்குவரத்து, நன்னீர் மீன்பிடி, விவசாயம், சுற்றுலா

காலநிலை

45 காலநிலை என்றால் என்ன?

நீணட காலமாக நிலவுகின்ற வளிமண்டலத்தின் பொதுவான இயல்புகள்

46 காலநிலையைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை?

வெப்பநிலை, மழைவீழ்ச்சி, மழைப்பருவம்

www.lkedu.lk

47 காலநிலைப் பரம்பல் பற்றி முதன் முதலில் கருத்து வெளியிட்டவர் யார்?

அரிஸ்டோட்டில்

48 அரிஸ்டோட்டலின் காலநிலை பிரிப்பின் இயல்புகள் எவை?

1 உலகினை மூன்று காலநிலை வலயங்களாகப் பிரித்தார்.

2 உலகின் அகலக்கோட்டு அமைவிடத்திற்கேற்ப வெப்பநிலைப் பரம்பலில் ஏற்படும் மாற்றங்களை இக்காலநிலைப் பாகுபாட்டிற்கு அடிப்படையாகக் கொண்டார்.

49 காலநிலைப் பாகுபாட்டை மேற்கொண்ட ஏனைய அறிஞர்கள் யாவர்?

ஒஸ்ரின்மில்லர், தோன்வைற், கெப்பன்

50 காலநிலை வலயங்களை அட்டவணைப்படுத்திக் காட்டுக.

காலநிலை வலயங்கள்	அகலக்கோட்டு அமைவிடம்	பண்பு	பரந்துள்ள பிரதேசம்
அயன வலயம்	கடகக்கோட்டிற்கும் மகரக்கோட்டிற்கும் இடையில்	• உயர்வெப்பநிலை 18^0Cக்குமேல் • உயர்மழைவீழ்ச்சி 2500mm – 4000mm • தீமான்சூன் காலநிலை சிறப்பு	• அயனக் காடுகள் - அமேசன், கொங்கோ • அயனப் பாலைவனம் - சகாரா, அரேபியா, தார், பெரிய அவுஸ்ரேலியா • அயனப் புல்வெளி – சவன்னா • இலங்கை, இந்தியா
இடைவெப்ப வலயம்	கடகக்கோட்டிற்கும் ஆட்டிக் வட்டத்திற் கிடையிலும் மகரக் கோட்டிற்கும் அந்தாட்டிக் வட்டத்திற்கும் இடையிலும்	• மத்தியதலைக் காலநிலை சிறப்பு • ஒவ்வொரு பரவகாலங்களிலும் வெப்பநிலையில் மாற்றங்கள் காணப்படும். • மழையுடன் கூடிய குளிர் காலநிலை காணப்படும்	• ஐரோப்பாவின் தென்பகுதி - ஸ்பெயின், இத்தாலி, கிரேக்கம் • ஆபிரிக்காவின் வடபகுதி – எகிப்து, டுனிசியா, லைபீரியா
முனைவு வலயம்	ஆட்டிக் வட்டத்திற்கும் வடமுனைவுக்கு இடையிலும் அந்தாட்டிக் வட்டத்திற்கும் தென் முனைவுக்கும் இடைப்பட்டது	• வரடாந்த மழைவீழ்ச்சி 250 – 300 மில்லி மீற்றர் • மூடுபனியும், மனிப்பனி வீழ்ச்சியம் காணப்படும். • விசேட காலநிலையாக துந்திராக் காலநிலை உள்ளது	ஊசியிலைக் காடுகள் காணப்படும். துருவமான், பனிக்கரடி,


www.lkedu.lk


கிறீன்லாந்து
ஆட்டிக் சமுத்திரம் (வட சமுத்திரம்)
பபின் தீவு
ஐஸ்லாந்து
பிரித்தானியா தீவுகள்
ஆசியா
வட அமெரிக்கா
ஐரோப்பா
யப்பான்
பசுபிக் சமுத்திரம்
கனேரிஸ் தீவுகள்
பகாமஸ்
கிஸ்பானியோலா
தாய்வான்
ஆபிரிக்கா
கியூபா
பிலிப்பைன்ஸ்
யமேக்கா
இலங்கை
மாலை தீவு
பப்புவா நியூகினியா
பசுபிக் சமுத்திரம்
சுமத்திரா
ஜவா
தென்அமெரிக்கா
சீசெல்ஸ்
மடகஸ்கார்
இந்து சமுத்திரம்
அவுஸ்திரேலியா
தஸ்மானியா
நியூசிலாந்து
போக்லன்ட் தீவு
அந்தாட்டிக் சமுத்திரம்

www.lkedu.lk


ஆட்டிக் சமுத்திரம்
பியூபோட் கடல்
ஒஸ்கொஸ்ட் கடல்
வடகடல்
பால்டிக் கடல்
கருங்கடல்
ஏரல்கடல்
மத்தியதரைக் கடல்
கஸ்பியன் கடல்
யப்பான் கடல்
மஞ்சட் கடல்
பசுபிக் சமுத்திரம்
கிழக்கு சீனக் கடல்
பசுபிக் சமுத்திரம்
கரிபியன் கடல்
செங்கடல்
அந்திலாந்திக் சமுத்திரம்
அரேபியக் கடல்
தென்சீனக்கடல்
அராபுக் கடல்
இந்து சமுத்திரம்
தைமூர் கடல்
அந்தாட்டிக் சமுத்திரம்

www.lkedu.lk


யூரல் மலை
சைபீரியன் சமவெளி
வடஐரோப்பிய சமவெளி
அல்ப்ஸ்மலை
அட்லஸ்மலை
மஞ்சூரியன் சமவெளி
மொங்கோலியன் மேட்டுநிலம்
அப்பினைன் மலை
பமீர்மேட்டுநிலம்
திபெத் மேட்டுநிலம்
இமயமலை
ஈரான் மேட்டுநிலம்
அற்லஸ் மலை
வடசீனச் சமவெளி
மேட்டுநிலம்
அரேபிய பீடபூமி
தக்கண மேட்டுநிலம்
தென்சீனக்கடல்
டெக்காஸ்
பி மேட்டு நிலம்
ராக்கி மலை
வடஅமெரிக்க பெரிய சமவெளி
அப்பலாச்சியன் மலை
மெக்சிக்கோ மேட்டுநிலம்
அத்தீஸ்மலை
பிறேசிலிய மேட்டு நிலம்
டிரக்கன்ஸ் பேர்க்
நுல்லபார் சமவெளி
பெரிய பிரிப்பு மலைத் தொடர்
மேட்டுநிலம்
சமவெளி

www.lkedu.lk



www.lkedu.lk

அலகு 03

உலகின் பிரதான நிலப் பயன்பாட்டின் பிரதான வகைகள்

(பாடவேளை 14)

01 விவசாய நிலப்பயன்பாடு என்றால் என்ன?

பயிர்ச்செய்கைக்கு நிலத்தைப் பயன்படுத்துவதாகும்.

02 விவசாய நிலப் பயன்பாட்டின் பிரதான அம்சங்கள் எவை?

பிழைப்பூதியம், வர்த்தக விவசாயம்

03 விவசாயத்துறையில் நிலப்பயன்பாட்டின் பெறுமானம் குறையாமைக்கான காரணங்கள் எவை?

1 மக்களுக்குத் தேவையான உணவினை வழங்கல்

2 கைத்தொழில்துறைக்குத் தேவையான மூலப்பொருட்களை வழங்குதல்.

3 உலக சனத்தொகையில் பெரும்பான்மையினோர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடல்

நா.செல்வச்சந்திரன்

4 உலக வர்த்தகத்தில் விவசாய உற்பத்திகள் முக்கிய இடம்பெறுகின்றன.

04 விவசாயப் பயிர்களுடன் தொடர்புபட்ட பல்வேறு வகையான உற்பத்திகளை தருக?

விவசாயப் பயிர்	உற்பத்திகள்
நெல்	அரிசி, அரிசிமா, பிஸ்கட்
கோதுமை	பாண், பிஸ்கட்
கோப்பி	பான வைகைகள்
கொக்கோ	சொக்லெற் வகைகள், பான வகைகள்
கரும்பு	சீனி, கடதாசி
தெங்கு	எண்ணெய், பால், புண்ணாக்கு
தேயிலை	தேயிலைத்தூள், பான வைகைகள்
இறப்பர்	ரயர், விளையாட்டுப் பொருட்கள்
பருத்தி	நூல். துணி

www.lkedu.lk

நெற்பயிர்ச்செய்கை

05 ஆசிய நாடுகளில் வாழும் பெரும்பான்மையான மக்களின் உணவு எது?

நெல்லரிசிச் சோறு

06 ஆசியாவில் நெல் பயிரிடப்படும் முக்கிய நாடுகள் எவை?

1 தாய்லாந்து 2 சீனா 3 இந்தியா

4 இந்தோனேசியா 5 ஜப்பான் 6 பாகிஸ்தான்

07 ஆசியாவிற்கு வெளியே நெல் பயிரிடப்படும் பிரதேசங்கள் எவை?

1 இத்தாலியின் போ நதிப் பிரதேசம்

2 அபிரிக்காவின் நைல்நதிப் பிரதேசம்

3 வட அமெரிக்காவின் சக்ரமன்ரோ பிரதேசம்

4 பிறேசிலின் கிழக்குக் கையோரப்பகுதி

5 அவுஸ்ரேலியாவின் மறேடார்லிங் நதிப்பள்ளத்தாக்கு

நா.செல்வச்சந்திரன்


08 மலைப்பாங்கான பிரதேசத்தில் நெற்பயிர்ச்செய்கை எவ்வாறு மேற்கொள்ளப்படும்?

படிக்கட்டு முறையில்

09 ஆசியாவில் இடம்பெறும் நெற்பயிர்ச்செய்கையின் பிரதான பண்பு எது?

உற்பத்தி செய்யப்படுகின்ற பிரதேசங்களை அவற்றை நுகருதல்

10 நெல் பயிரிடப்படும் நாடுகளை உலகப்படத்தில் குறித்துக் காட்டுக.



www.lkedu.lk

11 நெற்பயிர்ச்செய்கைக்கு சாதகமான காரணிகள் எவை?

1 வெப்பநிலை 27^0C

2 மழைவீழ்ச்சி 2000 மில்லி மீற்றர்

3 வளமான வண்டல் மண்

4 தாழ்வான சமவெளிப் பிரதேசம்

12 நெற்பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் எவை?

1 சிறிய நிலப்பரப்பில் பயிர் செய்யப்படுதல்.

2 சில சாடுகளில் வர்த்தக அடிப்படையில் பரந்த நிலப்பரப்பில் பயிர் செய்யப்படுதல்.

3 ஆசிய நாடுகளில் ஊழியச் செறிவு கொண்ட பயிர்ச்செய்கையாகக் காணப்படும்.

4 மரபணுத் தொழினுட்ப முறையில் நோய்களுக்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய குறுகிய காலத்தில் விளைச்சலைப் பெற்றுக்கொள்ளக்கூடிய விதைகளை அறிமுகஞ் செய்தல்.

5 விசேட தரங்களைக் கொண்ட நெல் உற்பத்தி செய்யப்படுதல்.(பொன்னி அரிசி)

நா.செல்வச்சந்திரன்

13 நெற் பயிர்ச்செய்கை தொடர்பான அண்மைக்காலப் போக்குகள் எவை?

1 சேதன உரப்பாவனை அதிகரிப்பு

2 இயந்திரப் பாவனையின் அதிகரிப்பு

3 புதிய நெல்லினங்கள் கண்டுபிடிக்கப்படல்

4 பிரதியீட்டுப் பொருட்கள் புதிய முறையில் உற்பத்தி செய்யப்படுதல்.

www.lkedu.lk

கோதுமை

14 உலகில் அதிகம் உற்பத்தி செய்யப்படுவதும் நுகரப்படுவதமான தானியம் எது?

கோதுமை

15 கோதுமை உற்பத்தி செய்யும் நாடுகளை குறித்துக் காட்டுக.



16 கோதுமையை உற்பத்தி செய்யும் பிரதான நாடுகள் எவை?

சீனா, இந்தியா, ரஸ்யா, ஐக்கிய அமெரிக்கா

17 கோதுமைப்பயிர்ச்செய்கைக்கு அவசரியமான காரணிகள் எவை?

1 வெப்பநிலை 12^0C - 25^0C

2 மழைவீழ்ச்சி 300 – 500 மில்லி மீற்றர்

3 பயிர் வளருகின்ற காலத்தில் காணப்படும் குளிர்ச்சியான ஈரக் காலநிலை

4 நன்கு நீர் வடிந்தோடக்கூடிய தட்டையான நிலம்

5 சேணாசம் மண்

www.lkedu.lk

18 கோதுமைப் பயிர்ச்செய்கையின் விருத்திக்குப் பங்களிப்புச் செய்த காரணிகள் எவை?

1 களைகொல்லிகள் 2 புதிய வகை விதைகள்

3 போதுமான மூலதனம் 4 இயந்திரப் பாவனை

5 நவீன தொழினுட்பங்கள்

19 கோதுமைப் பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் எவை?

1 ஓரினப் பயிர்செய்கையாக இருத்தல்

2 பரந்த நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படல்

3 பரந்தளவிலான சந்தை வசதிகள் இருத்தல்

4 பல்வேறு வகையான உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு நுகரப்படல்

20 கோதுமைப் பயிர்ச்செய்கையின் அண்மைக்காலப் போக்குகள் எவை?

1 நவீன தொழினுட்ப முறைகள் கையாளப்படுதல் (மரபணுத் தொழினுட்பம், மட்பாதுகாப்பு)

நா.செல்வச்சந்திரன்

2 பாரியளவிலான இயந்திரப் பாவனை

3 அதிக விளைச்சல் தரும் புதிய கோதுமை இனங்கள் பயன்படுத்தப்படுகின்றமை (நொரின் 10)

பெருந்தோட்டப் பயிர்கள்

21 பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை என்றால் என்ன?

பாரிய பெருந் தொட்டங்களில் சிறந்த முகாமைத்துவத்துடன் தொழிநுட்பத்திறன் மிக்க தொழிலாளர்களைப் பயன்படுத்தி ஏற்றுமதியை நோக்காகக் கொண்டு நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கையாகும்.

22 பெருந்தொட்டங்களில் பயிரிடப்படும் பயிர்கள் எவை?

தேயிலை, இறப்பர், கரும்பு, பருத்தி, கோப்பி, கொக்கோ, தெங்கு

www.lkedu.lk

23 பெருந்தொட்டப்பயிர்செய்கையின் விசேட பண்புகள் எவை?

1 மிகப்பெரிய பெருந்தோட்டங்களையும் வர்த்தக அடிப்பிடையிலான செயற்பாடுகளையும் கொண்டுள்ளன.

2 உள்நாட்டு, வெளிநாட்டு தொழிலாளர் என இரு பிரிவினர் பயன்படுத்தப்படுகின்றமை

3 கைத்தொழில் அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளமை

4 ஏற்றுமதிப் பயிர்களாகக் காணப்படுவதால் அந்நியச் செலாவணியின் மூலாதாரமாக உள்ளமை

5 பெரும்பாலன நாடுகளில் பெருந்தோட்டப் பயிர்செய்கை வெளிநாட்டவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை


தேயிலை

24 தேயிலைப் பயிரை கண்டுபிடித்தவர்கள் யார்?

சீனர்

நா.செல்வச்சந்திரன்

25 தேயிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் நாடுகளை குறித்துக் காட்டுக.



www.lkedu.lk

26 ஆசியாவிற்கு வெளியே தேயிலை பயிரிடப்படும் நாடுகள் எவை?

ஆபிரிக்கா – கென்யா, உகண்டா, தன்சானியா

தென் அமெரிக்கா – பிறேசில்

27 தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு சாதகமான காரணிகள் எவை?

1 வெப்பநிலை 15^0C - 27^0C

2 மழைவீழ்ச்சி 1900 – 5460 மில்லி மீற்றர்

3 களித்தன்மையான செம்பூரன் மண்

4 மென்சாய்வான பகுதிகள்

28 தேயிலைப் பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் எவை?

1 நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாக அறுவடை செய்யக்கூடிய பயிராக இருத்தல்

2 சிறிய, பெரிய தோட்டங்களாக விரிவடைந்துள்ளமை

3 சிறந்த முகாைத்துவம் கட்டுக்கொப்பான ஊழியர் ஒழுங்கமைப்பு உள்ளமை

4 தொழில்நட்பத்திறன் கொண்ட தொழிலாளர்கள் காணப்படுதல்

நா.தெய்வச்சந்தன்

29 தேயிலைப் பயிர்ச்செய்கையின் அண்மைக்காலப் போக்குகள் எவை?

1 விளைச்சலை அதிகரிக்க பல்வேறுபட்ட தொழில்நுட்பங்கள் பின்பற்றப்படுகின்றமை

2 தேயிலைத் தண்டு மூலம் தேயிலை வளர்க்கப்படல்

3 பல்வேறு சுவையுடனும், கவர்ச்சியாகப் பொதி செய்யப்பட்டு சந்தைப்

படுத்தப்படுகின்றமை (மஞ்சட் தேயிலை, கறுப்புத் தெயிலை, பச்சைத் தேயிலை)

www.lkedu.lk

இறப்பர்

30 பிறேசிலில் ஒரு காட்டுப் பயிராக இருந்து பெருந்தோட்டப் பயிராக மாற்றம் பெற்ற பயிர் எது?

இறப்பர்

31 இறப்பரினை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்ற முடிவுப் பொருட்கள்?

1 வாகன உதிரிப்பாகங்கள்


2 விளையாட்டுப் பொருட்கள்

3 இலத்திரனியல் சாதனங்கள்

4 வீட்டுப்பாவனைப் பொருட்கள்

5 அலங்காரப் பொருட்கள்

32 இறப்பர் பயிர் செய்யப்படும் நாடுகளைக் குறித்துக் காட்டுக.



www.lkedu.lk

33 இறப்பர் பயிர்ச்செய்கைக்கு சாதகமான காரணிகள் எவை?

1 வெப்பநிலை 27^0C மேல்

2 மழைவீழ்ச்சி – 2000 மில்லி மீற்றர் வரை

3 செம்பூரான் மண் அல்லது கபுக் கலந்த செம்மண்

34 இறப்பர் பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் எவை?

1 பாரிய தோட்டங்களில் பரவிக் காணப்படுகின்றமை

2 ஊழியச் செறிவான பயிர்ச்செய்கையாகக் காணப்படுகின்றமை

3 இறப்பர் மூலப்பொருளுக்கான கேள்வி அதிகரித்துள்ளமை

4 அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருாதார விருத்திக்கு பங்களிப்புச் செய்தல்

5 இறப்பர் பால் வெட்டுவதற்கும் சேகரிப்பதற்கும் மனித உழைப்பு பயன்படுத்தப்படுகின்றமை

நா.செல்வச்சந்திரன்

35 இறப்பர் பயிர்ச்செய்கையின் அண்மைக்காலப் போக்குகள் எவை?

1 புதிய தொழினுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றமை(இறப்பர் பால் வெட்டவும், சேகரிக்கவும்)

2 இறப்பர் மூலப் பொருளுக்கான கேள்வி அதிகரித்தல் (வாகன உதிரிப்பாகங்கள்)

3 இறப்பர் மூலப் பொருளாகவும் முடிவுப்பொருளாகவும் ஏற்றுமதி செய்யப்படுதல்

4 செயற்கை இறப்பர் உற்பத்தி காரணமாக இறப்பர் உற்பத்தி நாடுகள் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றமை

www.lkedu.lk

விலங்கு வேளாண்மை

36 தற்காலத்தில் விலங்கு வேளாண்மை முக்கியம் பெறுவதற்கான காரணங்கள் எவை?

1 உணவு மற்றும் பால்வகைகளைப் பெறுதல்

2 கைத்தொழிலுக்கான மூலப்பொருளைப் பெறுதல்

37 விலங்கு வேளாண்மையின் கீழ் வளர்க்கப்படும் மிருகங்கள் எவை?

பசு.மாடு, ஆடு, செம்மறி ஆடு, பன்றி, கோழி

38 விலங்கு வேளாண்மைக்கு சாதகமாக அமைந்த காரணிகள் எவை?

1 இடைவெப்ப வலயம் (அதிகளவில் பரம்பியுள்ளது)

2 நீர் வசதி

3 புல் நிலங்கள்


4 பயிற்றப்பட்ட தொழிலாளர்கள்

5 புதிய தொழினுட்பங்கள்

கா.செல்வச்சந்திரன்

39 உலக மக்களின் புரதத் தேவையை நிறைவு செய்யும் பிரதான உணவு எது? பால்

40 உலகில் பால் பண்ணை உற்பத்தியில் ஈடுபடுகின்ற நாடுகளை குறித்துக்காட்டுக.



www.lkedu.lk

41 பாற்பண்ணையின் விசேட பண்புகள் எவை? அண்மைக்காலப் போக்குகள்

1 உலகில் விருத்தியடைந்த நாடுகள் வர்த்தக ரீதியான பாற்பண்ணையின் அனைத்துத் துறைகளிலும் முன்னிலை வகிக்கின்றமை.

2 அபிவிருத்தியடைந்த நாடுகள் பால் தொடர்பான சந்தையைக் கட்டுப்படுத்தும் போக்குக் காணப்படுகின்றது.

3 பாலைச் சேகரித்தல், போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், சேகரிக்கும் பாலின் அளவைக் கூட்டுதல் போன்றவற்றுக்கு விருத்தியடைந்த நுட்ப முறைகள் பின்பற்றப்படுகின்றமை.

4 திரவ நிலையிலான பால் மற்றும் உற்பத்திகளுக்கான சந்தைகள் விரிவடைந்தமை.

5 வெண்ணெய்கட்டி, பட்டர், யோகட் போன்ற பாலுடன் தொடர்புடைய உற்பத்திகள் அதிகரித்தமை.

நா.செல்வச்சந்திரன்

www.lkedu.lk

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk || www.lkedu.lk
76667-4945

zoom Online வகுப்புக்கள்

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்



ICT

Maths English

Tamil History

Science



தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் | தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன

Contact

76667-4945

www.lkedu.lk

அலகு 03

உலகின் பிரதான நிலப் பயன்பாட்டின் பிரதான வகைகள்

01 விவசாய நிலப்பயன்பாடு என்றால் என்ன?

பயிர்ச்செய்கைக்கு நிலத்தைப் பயன்படுத்தவதாகும்.

02 விவசாய நிலப் பயன்பாட்டின் பிரதான அம்சங்கள் எவை?

பிழைப்பூதியம், வர்த்தக விவசாயம்

03 விவசாயத்துறையில் நிலப்பயன்பாட்டின் பெறுமானம் குறையாமைக்கான காரணங்கள் எவை?

1 மக்களுக்குத் தேவையான உணவினை வழங்கல்

2 கைத்தொழில்துறைக்குத் தேவையான மூலப்பொருட்களை வழங்குதல்.

3 உலக சனத்தொகையில் பெரம்பான்மையானோர் விவநாய நடவடிக்கைகளில் ஈடுபடல்

ஓ.செல்வச்சந்திரன்

4 உலக வர்த்தகத்தில் விவசாய உற்பத்திகள் முக்கிய இடம்பெறுகின்றன.

04 விவசாயப் பயிர்களுடன் தொடர்புபட்ட பல்வேறு வகையான உற்பத்திகளை தருக?

விவசாயப் பயிர்	உற்பத்திகள்
நெல்	அரிசி, அரிசிமா, பிஸ்கட்
கோதுமை	பாண், பிஸ்கட்
கோப்பி	பான வைகைகள்
கொக்கோ	சொக்லெற் வகைகள், பான வகைகள்
கரும்பு	சீனி, கடதாசி
தெங்கு	எண்ணெய், பால், புண்ணாக்கு
தேயிலை	தேயிலைத்தூள், பான வைகைகள்
இறப்பர்	ரயர், விளையாட்டுப் பொருட்கள்
பருத்தி	நூல். துணி

www.lkedu.lk

நெல் உற்பத்தி

05 உலகின் பிரதா நெற்செய்கைப் பிரதேசங்கள் எவை?

1 இத்தாலியின் போ நதிப் பிரதேசம்

2 அபிரிக்காவின் நைல்நதிப் பிரதேசம்

3 வட அமெரிக்காவின் சக்ரமன்ரோ பிரதேசம்

4 பிறேசிலின் கிழக்குக் கையோரப்பகுதி

5 அவுஸ்ரேலியாவின் மறேடார்லிங் நதிப் பள்ளத்தாக்கு

06 மலைப்பாங்கான பிரதேசத்தில் நெற்பயிர்ச்செய்கை எவ்வாறு மேற்கொள்ளப்படும்?

படிக்கட்டு முறையில்


07 ஆசியாவில் இடம்பெறும் நெற்பயிர்ச்செய்கையின் பிரதான பண்பு எது?

உற்பத்தி செய்யப்படுகின்ற பிரதேசங்களை அவற்றை நுகருதல்

08 ஆசியாவில் பிரதான நெற்பயிர்ச்செய்கை இடைபெறும் நாடுகள் எவை?

தாய்லாந்து, சீனா, இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான், பாகிஸ்தான், இலங்கை

09 நெல் பயிரிடப்படும் நாடுகளை உலகப்படத்தில் குறித்துக் காட்டுக.



நா.செல்வச்சந்திரன்

www.lkedu.lk

10 நெற்பயிர்ச்செய்கைக்கு சாதகமான காரணிகள் எவை?

1 வெப்பநிலை 27^0C

2 மழைவீழ்ச்சி 2000 மில்லி மீற்றர்

3 வளமான வண்டல் மண்

4 தாழ்வான சமவெளிப் பிரதேசம்

11 நெற்பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் எவை?

1 சிறிய நிலப்பரப்பில் பயிர் செய்யப்படுதல்.

2 சில சாடுகளில் வர்த்தக அடிப்படையில் பரந்த நிலப்பரப்பில் பயிர் செய்யப்படுதல்.

3 ஆசிய நாடுகளில் ஊழியச் செறிவு கொண்ட பயிர்ச்செய்கையாகக் காணப்படும்.

4 மரபணுத் தொழினுட்ப முறையில் நோய்களுக்குத் தாக்குபி பிடிக்கக்கூடிய குறுகிய காலத்தில் விளைச்சலைப் பெற்றுக்கொள்ளக்கூடிய விதைகளை அறிமுகஞ் செய்தல்.

நா.செல்வச்சந்திரன்

5 விசேட தரங்களைக் கொண்ட நெலட உற்பத்தி செய்யப்படுதல்.

12 நெற் பயிர்ச்செய்கை தொடர்பான அண்மைக்காலப் போக்குகள் எவை?

1 சேதன உரப்பாவனை அதிகரிப்பு 2 இயந்திரப் பாவனையின் அதிகரிப்பு

3 புதிய நெல்லினங்கள் கண்டுபிடிக்கப்படல்

4 பிரதியீட்டுப் பொருட்கள் புதிய முறையில் உற்பத்தி செய்யப்படுதல்.

www.lkedu.lk

கோதுமை உற்பத்தி

13 உலகில் அதிகம் உற்பத்தி செய்யப்படுவதும் நுகரப்படுவதமான தானியம் எது?

கோதுமை

14 கோதுமை உற்பத்தி செய்யும் நாடுகளை குறித்துக் காட்டுக.



15 கோதுமையை உற்பத்தி செய்யும் பிரதான நாடுகள் எவை?

சீனா, இந்தியா, ரஸ்யா, ஐக்கிய அமெரிக்கா

16 கோதுமைப்பயிர்ச்செய்கைக்கு அவசரியமான காரணிகள் எவை?

1 வெப்பநிலை 12^0C - 25^0C 2 மழைவீழ்ச்சி 300 – 500 மில்லி மீற்றர்

3 பயிர் வளருகின்ற காலத்தில் காணப்படும் குளிர்ச்சியான காலநிலை

4 நன்கு நீர் வடிந்தோடக்கூடிய தட்டையான நிலம் 5 சேணாசம் மண்

www.lkedu.lk

17 கோதுமைப் பயிர்ச்செய்கையின் விருத்திக்குப் பங்களிப்புச் செய்த காரணிகள் எவை?

1 களைகொல்லிகள்

2 புதிய வகை விதைகள்

3 போதுமான மூலதனம்

4 இயந்திரப் பாவனை

5 நவீன தொழினுட்பங்கள்

18 கோதுமைப் பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் எவை?

1 ஓரினப் பயிர்செய்கையாக இருத்தல்

2 பரந்த நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படல்

3 பரந்தளவிலான சந்தை வசதிகள் இருத்தல்

4 பல்வேறு வகையான உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு நுகரப்படல்

நா.செல்வச்சந்திரன்

19 கோதுமைப் பயிர்ச்செய்கையின் அண்மைக்காலப் போக்குகள் எவை?

1 நவீன தொழினுட்ப முறைகள் கையாளப்படல் (மரபணுத் தொழினுட்பம், மட்பாதுகாப்பு)

2 பாரியளவிலான இயந்திரப் பாவனை

3 அதிக விளைச்சல் தரும் புதிய கோதுமை இனங்கள் படுத்தப்படுகின்றமை(நொரின் 10)

www.lkedu.lk

பெருந்தோட்டப் பயிர்கள்

20 பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை என்றால் என்ன?

பாரிய பெரந் தொட்டங்களில் சிறந்த முகாமைத்துவத்துடன் தொழிநுட்பத்திறன் மிக்க தொழிலாளர்களைப் பயன்படுத்தி ஏற்றுமதியை நோக்காகக் கொண்டு நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கையாகும்.

21 பெருந்தொட்டங்களில் பயிரிடப்படும் பயிர்கள் எவை?

தேயிலை, இறப்பர், கரும்பு, பருத்தி, கோப்பி, கொக்கோ, தெங்கு

22 பெருந்தொட்டப்பயிர்செய்கையின் விசேட பண்புகள் எவை?

1 மிகப்பெரிய பெருந்தோட்டங்களையும் வர்த்தக அடிப்பிடையிலான செயற்பாடுகளையும் கொண்டுள்ளன.

2 உள்நாட்டு, வெளிநாட்டு தொழிலாளர்என இரு பிரிவினர் பயன்படுத்தப்படுகின்றமை

நா.செல்வச்சந்திரன்

3 கைத்தொழில் அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளமை

4 ஏற்றுமதிப் பபயிர்களாகக் காணப்படுவதால் அந்நியச் செலாவணியின் மூலாதாரமாக உள்ளமை


5 பெரும்பாலன நாடுகளில் பெருந்தோட்டப் பயிர்செய்கை வெளிநாட்டவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை

www.lkedu.lk

தேயிலை

23 தேயிலைப் பயிரை கண்டுபிடித்தவர்கள் யார்? சீனர்

24 தேயிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் நாடுகளை குறித்துக் காட்டுக.



25 தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு சாதகமான காரணிகள் எவை?

1 வெப்பநிலை 15^0C - 27^0C

2 மழைவீழ்ச்சி 1900 – 5460 மில்லி மீற்றர்

3 களித்தன்மையான செம்பூரன் மண்

4 மென்சாய்வான பகுதிகள்

26 தேயிலைப் பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் எவை?

1 நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாக அறுவடை செய்யக்கூடிய பயிராக இருத்தல்

2 சிறிய, பெரிய தோட்டங்களாக விரிவடைந்துள்ளமை

3 சிறந்த முகாைத்துவம் கட்டுக்கொப்பான ஊழியர் ஒழுங்கமைப்பு உள்ளமை

4 தொழில்நட்பத்திறன் கொண்ட தொழிலாளர்கள் காணப்படுதல்

www.lkedu.lk

27 தேயிலைப் பயிர்ச்செய்கையின் அண்மைக்காலப் போக்குகள் எவை?

1 விளைச்சலை அதிகரிக்க பல்வேறுபட்ட தொழில்நுட்பங்கள் பின்பற்றப்படுகின்றமை

2 தேயிலைத் தண்டு மூலம் தேயிலை வளர்க்கப்படல்

3 பல்வேறு சுவையுடனும், கவர்ச்சியாகப் பொதி செய்யப்பட்டு சந்தைப் படுத்தப்படுகின்றமை (மஞ்சட் தேயிலை, கறுப்புத் தெயிலை, பச்சைத் தேயிலை)

இறப்பர்

28 பிறேசிலில் ஒரு காட்டுப் பயிராக இருந்து பெருந்தோட்டப் பயிராக மாற்றம் பெற்ற பயிர் எது?

இறப்பர்

29 இறப்பரினை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்ற முடிவுப் பொருட்கள்?

நா.சென்னிச்சந்திரன்

1 வாகன உதிரிப்பாகங்கள்

2 விளையாட்டுப் பொருட்கள்


3 இலத்திரனியல் சாதனங்கள்

4 வீட்டுப்பாவனைப் பொருட்கள்

5 அலங்காரப் பொருட்கள்

www.lkedu.lk

30 இறப்பர் பயிர் செய்யப்படும் நாடுகளைக் குறித்துக் காட்டுக.



31 இறப்பர் பயிர்ச்செய்கைக்கு சாதகமான காரணிகள் எவை?

1 வெப்பநிலை 27^0C மேல்

2 மழைவீழ்ச்சி – 2000 மில்லி மீற்றர் வரை

3 செம்பூரான் மண் அல்லது கபுக் கலந்த செம்மண்

32 இறப்பர் பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் எவை?

1 பாரிய தோட்டங்களில் பரவிக் காணப்படுகின்றமை

2 ஊழியச் செறிவான பயிர்ச்செய்கையாகக் காணப்படுகின்றமை

3 இறப்பர் மூலப்பொருளுக்கான கேள்வி அதிகரித்துள்ளமை

4 அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார விருத்திக்கு பங்களிப்புச் செய்தல்

5 இறப்பர் பால் வெட்டுவதற்கும் சேகரிப்பதற்கும் மனித உழைப்பு பயன்படுத்தப்படுகின்றமை

செல்வச்சந்திரன்

www.lkedu.lk

33 இறப்பர் பயிர்ச்செய்கையின் அண்மைக்காலப் போக்குகள் எவை?

1 புதிய தொழினுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றமை(இறப்பர் பால் வெட்டவும், சேகரிக்கவும்)

2 இறப்பர் மூலப் பொருளுக்கான கேள்வி அதிகரித்தல் (வாகன உதிரிப்பாகங்கள்)

3 இறப்பர் மூலப் பொருளாகவும் முடிவுப்பொருளாகவும் ஏற்றுமதி செய்யப்படுதல்

4 செயற்கை இறப்பர் உற்பத்தி காரணமாக இறப்பர் உற்பத்தி நாடுகள் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றமை

34 தற்காலத்தில் விலங்கு வேளாண்மை முக்கியம் பெறுவதற்கான காரணங்கள் எவை?

1 உணவு மற்றும் பால்வகைகளைப் பெறுதல்

2 கைத்தொழிலுக்கான மூலப்பொரளைப் பெறுதல்

நா.செல்வச்சந்திரன்

35 விலங்கு வேளாண்மையின் கீழ் வளர்க்கப்படும் மிருகங்கள் எவை?

பசு.மாடு, ஆடு, செம்மறி ஆடு, பன்றி, கோழி

36 விலங்கு வேளாண்மைக்கு சாதகமாக அமைந்த காரணிகள் எவை?

1 இடைவெப்ப வலயம்

2 நிர் வசதி

3 புல் நிலங்கள்

4 பயிற்றப்பட்ட தொழிலாளர்கள்

5 புதிய தொழினுட்பங்கள்

www.lkedu.lk

விலங்கு வேளாண்மை

37 உலக மக்களின் புரதத் தேவையை நிறைவு செய்யும் பிரதான உணவு எது?

பால்

38 உலகில் பால் பண்ணை உற்பத்தியில் ஈடுபடுகின்ற நாடுகளை குறித்துக்காட்டுக.



39 பாற்பண்ணையின் விசேட பண்புகள் எவை? அண்மைக்காலப் போக்குகள்

1 உலகில் விருத்தியடைந்த நாடுகள் வர்த்தக ரீதியான பாற்பண்ணையின் அனைத்துத்

துறைகளிலும் முன்னிலை வகிக்கின்றமை.

2 அபிவிருத்தியடைந்த நாடுகள் பால் தொடர்பான சந்தையைக் கட்டுப்படுத்தும் போக்குக் காணப்படுகின்றது.

3 பாலைச் சேகரித்தல், போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், சேகரிக்கும் பாலின் அளவைக் கூட்டுதல் போன்றவற்றுக்கு விருத்தியடைந்த நுட்ப முறைகள் பின்பற்றப்படுகின்றமை.

4 திரவ நிலையிலான பால் மற்றும் உற்பத்திகளுக்கான சந்தைகள் விரிவடைந்தமை.

5 வெண்ணெய்கட்டி, பட்டர், யோகட் போன்ற பாலுடன் தொடர்புடைய உற்பத்திகள் அதிகரித்தமை.

www.lkedu.lk

அலகு 04

இலங்கையின் விவசாயம் (பாடவேளை 16)

01 விவசாய நாடாக இலங்கையின் இயல்புகள் எவை?

1 விவசாயத்திற்கு ஏற்ற சூழலைக் கொண்டது

2 விவசாயப் பொருளாதார நாடாக விளங்கியது.

3 இலங்கையின் பொருளாதாரமும், கலாசாரமும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

நெல்

02 சுதந்திரத்தின் பின்னர் நெற்பயிர்ச்செய்கை விருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எவை?

1 வறள் வலயத்தில் விவசாயக் குடியேற்றங்களை அமைத்தல்.

2 குளங்களை புனரத்தாரணம் செய்தல்

நா.செல்வச்சந்திரன்

3 நெற்பயிர்ச்செய்கையில் பசுமைப் புரட்சியின் செல்வாக்குக் காரணமாக நெல் வர்த்தகப் பயிராக மாற்றமடைந்துள்ளமை.

03 நெற்பயிர்ச்செய்கையின் முக்கியத்தவங்கள் எவை? (விசேட பண்புகள்)

1 நெல் இலங்கை மக்களின் பிரதான உணவாகும்.

2 உள்ளூர் வர்த்தகப் பயிராக முக்கியம் பெற்றுள்ளது.

3 நெல் சார்ந்த உற்பத்திப் பொருட்கள் பல சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

4 பல்வேறு கைத்தொழில்களுக்கான மூலப்பொருட்களை வழங்குகின்றது.

04 நெல் ஆராய்ச்சி நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் எவை?

போம்புவல, மகாஇலுப்பல்லம, பத்தலேகொட, ஹிங்குராங்கொட, அம்பாந்தோட்டை

www.lkedu.lk

05 நெற்பயிர்ச்செய்கைக்கு சாதகமான காரணிகள் எவை?

1 வெப்பநிலை 21^0C - 35^0C

2 மழைவீழ்ச்சி – 1900 மில்லி மீற்றர்

3 ஈரத்தன்மையான வண்டல் மண்

4 விதைக்கும் காலத்தில் ஈரலிப்பும் அறுவடைக் காலத்தில் வரட்சியும்

06 இலங்கையின் பிரதான நெல் உற்பத்தி மாவட்டங்கள் எவை?

அனுராதபுரம், பொலநறுவை, குருநாகல், காலி, அம்பாறை, மட்டக்களப்பு

07 நெற்பயிர்ச்செய்கையின் அண்மைக்காலப் போக்குகள் எவை?

1 நெல் ஆராய்ச்சி நிறுவனங்காளல் பல்வேறு ஆராய்ச்சிகள்
மேற்கொள்ளப்படுவதன் மூலம் புதிய நெல்லினங்கள் அறிமுகம்

2 விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்படல்

3 நீர் வழங்கலுக்கான வசதிகள் விரிவுபடுத்துள்ளமை

4 நெல் மூலப்பொருளிலிருந்து பல்வேறு உற்பத்திகள்
மேற்கொள்ளப்படுதல்(அரிசி, பிஸ்கட், அரிசிமா, நூடில்ஸ்)

நா.செல்வசந்திரன்

08 இலங்கையில் நெல் உற்பத்தி வலயங்களையும் அவற்றின் இயல்புகளையும் தருக?

வலயம்	மாவட்டங்கள்	இயல்புகள்
வரண்ட வலயம்	அனுராதபுரம், பொலநறுவை, மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம்	• சிறுபோகம், பெரும்போகம் ஆகிய இரு போகங்களிலும் சில இடங்களில் இடைப்போகத்திலும் நெல் பயிரிடப்படுகின்றது. • மழைநீரும், ஏனைய நீர் விநியோக முறைகளும் பயன்படுகின்றன. • ஒவ்வொரு அலகுகளுக்கான அறுவடை அதிகரிப்பால் ஏக்கரக்கான விளைச்சல் அதிகரித்துள்ளது. • அதிகளவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

www.lkedu.lk

இடைமாறு வலயம்	குருநாகல், பதுளை, மாதடதளை, மொனாராகலை, மாத்தறை	• மழைநீரும், ஏனைய நீர் விநியோக முறைகளும் பயன்படுகின்றன. • ஒவ்வொரு அலகுகளுக்கான அறுவடை அதிகரிப்பால் ஏக்கரக்கான விளைச்சல் அதிகரித்துள்ளது. • அதிகளவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
ஈர வலயம்	காலி, களுத்துறை, இரத்தினபுரி, கொழும்பு, கேகாலை, கம்பஹா	• நதிக்கரைகளிலும் தாழ்வான பிரதெசங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றமை • பிரதானமாக மழைநீரின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றது. • உலர் வலயத்துடன் ஒப்பிடும் போது விளைச்சல் குறைவானதாகும். • சிறிய நிலங்களில் நெல் பயிரிடப்படும். • அடிக்கடி ஏற்படும் வெள்ளப்பெருக்கால் பயிர்ச்செய்கை பாதிக்கப்படும்
மலைப்பகுதிகள்	கண்டி, நுவரேலியா, மாத்தளை	• படிமுறை அமைப்பில் மேற்கொள்ளப்படுகின்றமை. • நுவரெலியாவில் மிகக் குறைந்தளவு நெல் பயிரிடப்படுகின்றமை. • ஒவ்வொரு அலகு நிலத்திலிருந்தும் குறைந்தளவு விளைச்சல் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

நா.செல்வச்சந்திரன்

தேயிலை

09 இலங்கைக்குத் தெயிலையை அறிமுகப்படுத்தியவர் யார்?

ஜேம்ஸ் டெய்லர்(1839)

10 தேயிலை பெருந்தோட்டப் பயிராகப் பயிரிடப்பட்ட இடம் எது?

லூல் கண்டுரா(1867)

www.lkedu.lk

11 தேயிலை உற்பத்தி செய்யப்படும் பிரதேசங்களின் வகைகள் எவை?

1 உயர் நிலத்தேயிலை - 1220 மீற்றருக்கு மேற்பட்ட உயர் நிலங்கள்

2 மத்திய நிலத் தேயிலை - 610 மீற்றர் - 1220 மீற்றருக்கு இடைப்பட்டது.

(கண்டி, மாத்தளை, பதுளை)

3 தாழ்நிலத் தேயிலை - 610 மீற்றருக்கு குறைந்த உயரம் (மாத்தறை, காலி,

அம்பாந்தோட்டை,)

12 தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?

தலவாக்கொல்லை

13 தேயிலைப் பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் எவை?

1 சிறிய மற்றும் பெரிய தோட்டங்களில் பயிரிடப்படுதல்

2 உள்ளூரிலும், சர்வதேசத்திலும் சந்தைகள் காணப்படுதல்

3 கொள்ளவனவு செய்யும் நாடுகளாக ஈரான், ஈராக், ஐக்கிய அரபுக் குடியரசு,

சிரியா

நா.செல்வச்சந்திரன்

14 தேயிலைப் பயிர்ச்செய்கையின் அண்மைக்காலப் போக்குகள் எவை?

1 சிறுதேயிலைப் பெருந்தோட்ட அபிவிருத்தி அதிகார சபை உருவாக்கப்பட்டுள்ளமை.

2 இலங்கைத் தேயிலைச் சபை

3 பயிற்றப்பட்ட தொழிலாளர்

4 விரைவான பொக்குவரத்து சேவைகள்

5 தேயிலை பல்வேறு வடிவங்களில் ஏற்றுமதி செய்யப்படல்

(பத்சைத்தேயிலை, கறுவா தேயிலை, ரான் தேயிலை, உடனடித் தேயிலை)

www.lkedu.lk

15 உலகில் உயர்தரத் தேயிலையை உற்பத்தி செய்யும் முக்கிய நாடு எது?

இலங்கை

தென்னை

16 தென்னையிலிருந்து தயாரிக்கப்படும் பல்வேறு பொருட்கள் எவை?

உணவுப்பொருட்கள், குடிவகை, அலங்காரப் பொருட்கள், தளபாடம்,

கைப்பணிப்பொருள்

17 தென்னைக்கு சதமாகமான காரணிகள் எவை?

1 வெப்பநிலை 20^0C – 27^0C வரை

2 மழைவீழ்ச்சி 2000 – 2500 மி.மீற்றர்

3 உவர் தன்மையா மண்

18 தென்னை முக்கோண வலயத்தினுள் அடங்குபுலங்கள் எவை?

கொழும்பு, குருநாகல், சிலாபம்

செல்வச்சந்நிதி

19 சிறு தென்னை முக்கோண வலயங்கள் எவை?

ரன்ன, மிதிதெனிய, தங்காலை

20 இலங்கையில் பயிரிடப்படும் பயிர்களுள் 28 சதவீதம் வரையான நிலப்பரப்பில் பயிரிடப்படும் பயிர் எது? தென்னை

21 தென்னை ஆயராச்சி நிலையங்கள் உள்ள இடம்?

லுணுவில, எம்பிலிப்பிட்டிய

22 தென்பைப் பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் எவை?

1 இலங்கை மக்களின் வாழ்க்கையுடன் இணைந்த தாவரம்

2 அனைத்து மாவட்டத்திலும் வீட்டுத்தோட்டப் பயிராகப் பயிரிடப்படுகின்றது.

3 உற்பத்தியின் பெரும்பங்கு உள்ளூர் நுகர்விற்குப் பயன்படுகின்றது.

4 நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் நிலப்பரப்போடு ஒப்பிடும் போது இரண்டாவது இடத்தில் உள்ளது.

www.lkedu.lk

23 தென்னைப் பயிர்ச்செய்கையின் அண்மைக்காலப் போக்குகள் எவை?

1 உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்கள் விரிவடைந்தமை.

2 தொழிலாளர்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடிகின்றமை.

3 ஆராய்ச்சி நிலையங்களின் சிறந்த செயற்பாட்டால் தெங்கு உற்பத்தி நாடுகளின் பட்டியலில் 4ஆவது இடத்தில் உள்ளது.

இறப்பர்

24 இலங்கையில் முதலாவது இறப்பர் மரத்தை நட்டவர் யார்? எங்கே நடப்பட்டது?

1890இல் ஹென்றி விக்கெம்பி, கம்பஹாவின் கெனரத்கொட பூங்கா

25 இறப்பர் உற்பத்தி இடங்கள் எவை?

கேகலை, களுத்தறை, இரத்தினபுரி, கொழும்பு

26 புதிதாக இறப்பர் பயிரிட நடவடிக்கையெடுக்கப்படடுள்ள இடம் எது?

வவுனியா, முல்லைத்தீவு

27 இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?

அகலவத்த

செல்வச்சந்திரன்

28 இறப்பர் பயிர்ச்செய்கையின் விசேட பண்புகள் எவை?

1 பயிற்றப்பட்ட தொழிலாளர்

2 போக்குவரத்து வசதிகள்

3 உள்ளூர், வெளியூர் சந்தைகள்

4 வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளல்

29 இறப்பர் பயிர்ச்செய்கையின் அண்மைக்காலப் போக்குகள் எவை?

1 மழை காலங்களில் இறப்பர் பால் எடுப்பதற்கு அங்கிககள் வழங்கப்படல்

2 பயிரிடுவோருக்கான அறிவுறுத்தல் மற்றும் விரிவாக்கல் சேவைகள் வழங்கப்படல்

3 ஒஸ்ரியா, பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

www.lkedu.lk

சிறு ஏற்றுமதிப் பயிர்

30 சிறு ஏற்றுமதிப் பயிர்கள் என்றால் என்ன?

பாரம்பரிய பிரதான வர்த்தகப் பயிர்களை விடச் சிறு அளவில் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படுகின்ற பயிர்களாகும்.

31 இலங்கை அரசு சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மீது கவனம் செலுத்திய ஆண்டு எது?

1980 பின்

32 இதற்கான காரணங்கள் எவை?

1 பாரம்பரிய ஏற்றுமதிப் பயிர்கள் விலைத் தளம்பலுக்கு உட்படுகின்றமை.

2 தெயிலை, தென்னை, இறப்பர் போன்ற மரபு ரீதியான ஏற்றுமதியில் தங்கியருப்பது முழுமையாகச் சாத்தியமற்றதாக இருந்தமை.

3 ஊடு பயிர்களாக சிறு ஏற்றுமதிப் பயிர்களை பயிர்செய்ய முடிந்தமை.

4 வேலை வாய்ப்புக்களை உருவாக்க முடிந்தமை

5 உலகச் சந்தையில் சிறு ஏற்றுமதிப் பயிர்களுக்கான கேள்வி அதிகரித்தமை.

33 சிறு ஏற்றுமதி பயிர்கள் திணைக்களம் உருவாக்கப்பட்ட ஆண்டு எது?

1972

நா.செல்வச்சந்திரன்

34 சிறு ஏற்றுமதிப் பயிர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்ட பயிர்கள் எவை?

பூக்கள், காய்கறிகள், மளிகாய்கள், வெற்றிலை, அலங்காரத் தாவரங்கள்

35 சிறு ஏற்றுமதி பயிர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?

மாத்தளை

36 சிறு ஏற்றுமதிப் பயிர்களையும் அவை உற்பத்தி செய்யப்படும் பிரதேசங்களையும் அட்டவணைப்படுத்துக?

சிறு ஏற்றுமதிப் பயிர்	பரந்துள்ள பிரதேசம்
கறுவா	நீர்கொழும்பு – மாத்தறை வரையான கடற்கரையோரம், இரத்தினபுரி, அம்பாந்தோட்டை
கோப்பி	களுத்துறை, இரத்தினபரி, கேகாலை, கம்பஹா
மிளகு	மாத்தளை, கண்டி, கேகாலை
ஏலம்	கண்டி, கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை

www.lkedu.lk

கராம்பு	மாத்தளை, கண்டி, கேகாலை
சாதிக்காய்	மாத்தளை, கண்டி, இரத்தினபுரி
முந்திரி	மன்னார், அம்பாந்தோட்டை, புத்தளம்
சித்திரநெல்லா	மாத்தறை, அம்பாந்தோட்டை
பூக்கள்	நுவரெலியா? பதுளை, பண்டாரவளை

37 மகாவலி அபிவிருத்தி வலயத்தில் வீட்டுத் தோட்டப் பயிர்களாகப் பயிரிடப்படுபவை எவை?

வெள்ளரி, தர்பூசணி, வாழைக்கழம், சோளம், பூக்கள், அலங்காரத் தாவரங்கள்

மரக்கறிப் பயிர்ச்செய்கை

38 இலங்கையில் பயிரிடப்படும் மரக்கறி வகைகளின் விசேட பண்புகள் எவை?

1 இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் பயிர் செய்யப்படக் கூடியவை

2 நிலத்தின் சிறிய பகுதியில் கூட வியாபாரப் பயிராகவோ அல்லது உள்ளூர்ப் பயிராகவோ அல்லது பயிருக்கு இடையிலே ஊடு பயிராகவோ விளைவிக்கலாம்.

நா.தேவச்சந்திரன்

3 ஆரம்ப காலத்தில் காணப்பட்ட விசேடமான பிரதேசங்கள் எவை?

1 வறண்ட வலயம் - முருங்கைக்காய், பூசணிக்காய், பறங்கி, தக்காளி, கத்தரி

2 ஈர வலயம் - வெண்டைக்காய், பயற்றங்காய், புடோலங்காய், பீர்க்கங்காய்

3 மலைநாடு - லீக்ஸ், கோவா, போஞ்சி, கரட், நோக்கோல், பீட்ரூட்

39 மரக்கறிப் பயிர்களின் அண்மைக்காலப் போக்குகள் எவை?

1 தொழினுட்ப முன்னேற்றத்துடன் மலைநாட்டு மரக்கறிகள் பல பிரதேசங்களின் பயிரிடப்படுகின்றமை.

2 சிறந்த முகாத்தவத்தின் கீழ் வெலிமடை, பண்டாரவளை, பதுளை, நுவரெலியா ஆகிய பிரதேசங்களில் வர்த்தக நோக்கில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

3 அதிகளவு தொழிலாளர்கள் வேலைக்கமர்தப்பட்டுள்ளமை.

www.lkedu.lk

4 பயிர் செய்கைகளுக்கான உரம் விலங்குப் பண்ணைகளிலிருந்து பெறப்பட்டுள்ளது.

5 பதுளை, மாத்தளை, கண்டி, அம்பாந்தோட்டை, அனுராதபுரம், யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களின் உள்ளூர், வெளியூர் சந்தைக்காக மரக்கறிகள் பெரிய அளவில் பயிரிடப்படுகிறது.

பழப்பயிர்கள்

40 வர்த்தக நோக்கில் பயிரிடப்படும் பயிர்கள் எவை?

வாழை, அன்னாசி, மாம்பழம், கொடித்தொடை, திராட்சை, பப்பாசி, தோடை, ஆனைக்கொய்யா

41 பின்வரும் பயிர்கள் பயிரிடப்படும் பிரதேசங்கள் எவை?

1 வாழை - அம்பாந்தோட்டை, மொனராகலை, இரத்தினபுரி, யாழ்ப்பாணம்

2 பியர்ஸ், திராட்சை, ஸ்ரோபரி - நுவரேலியா, பதுளை

42 இலங்கையிலிருந்து பழங்கள் ஏற்றுமதி செய்யப்படும் முறைகள் எவை?

பழங்கள், துண்டுகளாக்கப்பட்ட பழங்கள், தகரத்தில் அடைக்கப்பட்ட பழங்கள், நீரகற்றப்பட்ட பழங்கள், பதப்படுத்தப்பட்ட பழங்கள்

செல்வச்சந்நிதி

43 விலங்கு வேளாண்மையில் கவனம் செலுத்தப்படுவதற்கான காரணங்கள் எவை?

1 மக்களின் போசாக்கு மட்டத்தை உயர்த்தல்

2 கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல்.

3 விவசாயத்திற்குத் தேவையான உரங்களை வழங்குதல்.

4 அந்நியச் செலாவணியை உழைத்தலும், சேமித்தலும்

5 விவசாயச் சமூகங்களுக்கு மேலதிக வருமானத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

www.lkedu.lk

விலங்கு வேளாண்மை

44 பால் பண்ணை உற்பத்தியில் கவனம் செலுத்தப்பட்டமைக்கான காரணங்கள் எவை?

1 இறக்குமதி செய்யப்படும் பாற்பொருட்களுக்குச் செலவிடுகின்ற பணத்தை சேமித்தல்.

2 இலங்கை மக்களின் போசனை மட்டத்தை மேம்படுத்தல்.

45 மந்தை வளர்ப்பு மேற்கொள்ளப்படும் இடங்கள் எவை?

நுவரெலியா, பதுளை, பொலன்னறுவை, அம்பாந்தோட்டை, அம்பாறை, அனுராதபுரம்

46 காலநடை ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் எவை?

அம்பேவெல, கனன்வில, வல்பிட்ட

47 ஆராய்ச்சி நிலையங்களால் வழங்கப்படும் சேவைகள் எவை?

1 புதிய பசு இனங்கள் அறிமுகப்படுத்தப்படல்

2 புதிய புல்லினங்கள் அறிமுகம்

3 தேவையான அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கப்படல்

48 பால் தரும் பசுக்களை பரிமாறிக்கொள்வதற்கு உருவாக்கப்பட்ட அமைப்பு எது?

மீவனபலன(பசும்பால் வளம த்திய நிலையம்)

49 அண்மைக்காலத்தில் முக்கியம் பெற்றுள்ள பால் உற்பத்திகள் எவை?

நெய், பால்மா, பொதி செய்யப்பட்ட பசும்பால், திரவப்பால், தயிர், கிருமி நீக்கிய பால், ஆடை நீக்கிய பால், வெண்ணெய், பாற்கட்டி, ஐஸ்கிறிம், யோக்கட்

மீன்பிடிக் கைத்தொழில்

50 இலங்கையின் மீன்பிடிக்கைத்தொழிலின் விருத்தியில் பங்களிப்புச் செய்யும் காரணிகள் எவை?

1 இலங்கை சமுத்திரத்தினால் சூழப்பட்ட தீவாக இருத்தல்

2 தீவைச்சுற்றி நீண்ட கடற்கரை காணப்படுதல்.

3 பரந்த கண்டமேடைகளைக் கொண்டிருத்தல்.

4 குடாக்கள், கடல்நிரேரிகள், துறைமுகங்கள் காணப்படுதல்

5 ஆறுகள், கால்வாய்கள், அரவிகள், குளங்கள், நீர்த்தேக்கங்கள் போன்றன காணப்படுதல்.

www.lkedu.lk

51 இலங்கையைச் சூழவுள்ள கடல் வலயங்கள் எவை?

1 ஆள்புலக் கடலெல்லை – 12 கடல்மைல் வரையில்

2 அண்மைவலயம் - 12 – 24 கடல்மைல் வரையில்

3 தனித்துவமான பொருளாதார வலயம் - 200 கடல்மைல் வரை

52 மீன்பிடிக் கைத்தொழிலின் முக்கியத்துவங்கள் எவை?

1 மக்களின் உணவிற்குத் தேவையான புரதத்தை அளிக்கின்றது

2 மீன்பிடிக் கைத்தொழிலுக்காக பரந்த உள்ளூர், வெளியூர் சந்தை வாய்ப்பு

3 வேலைவாய்ப்புக்களைப் பெற்றுத்தருகின்றமை

4 அந்நியச் செல்வணி பெற்றுக்கொள்ளப்படுகின்றமை

5 மீன்பிடிக்கைத்தொழிலை விருத்தி செய்வதற்கான வளங்கள் காணப்படுகின்றமை.

53 இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழிலின் பிரிவுகள் எவை?

1 கடல்நீர் மீன்பிடி

2 நன்நீர் மீன்பிடி

3 உவர் நீர் மீன்பிடி

ஜோ.செல்வச்சந்திரன்

54 கடல்நீர் மீன்பிடிக்கைத்தொழில் மேற்கொள்ளப்படும் வலயம் எது?

வரையறுக்கப்பட்ட பொருளாதார வலயம்

55 கடல்நீர் மீன்பிடிக் கைத்தொழிலின் வகைகள் எவை?

1 கடற்கரையோரம் சார்ந்த கடல் அல்லது கண்டமேடையில் இடம்பெறும் மீன்பிடி

2 ஆழ்கடல் மீன்பிடி

56 ஆழமற்ற கடலில் மீன்கள் அதிகம் இரப்பதற்கான காரணங்கள் எவை?

1 மீனின் உணவாகிய பிளாங்ரன் அதிகம் காணப்படுகின்றமை

2 ஆறுகள், அருவிகள் கால்வாய்களால் கொண்டு வரப்படுகின்ற சேதன உணவுத் துணிக்கைகள் கரையோரப் பகுதிகளில் படிவு செய்யப்படுகின்றமை.

3 சமுத்திர நீரோட்டத்தினால் கடலின் அடியில் உள்ள மீன் உணவு நீரின் மேற்பரப்புக்கு எடுத்து வரப்படுகின்றமை.

www.lkedu.lk

57 கரையோரப் பகுதிகளில் காணப்படும் மீன்கள் எவை?

சாலை, நெத்தலி, ஹீரல்ல, எற்றாவலை, சூடை, முல்லவர், அலகொடுவா

58 ஆழ்கடலில் காணப்படும் மீனினங்கள் எவை?

தலபத்து, தொரா, மோரா(சுறா0, கொப்பரா, கெலவல்ல

59 ஆழ்கடல் மீனிபிடித்தலில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் எவை?

கரைவலை, பரப்பும் கரையோர வலை, முப்பரிமாண வலை, இழுவை வலை,

இயந்திரப் படகு, நீண்ட நாட்களிற்கான படகு

60 நன்னீர் மீன்பிடி மேற்கொள்ளப்படும் இடங்கள் எவை?

குளங்கள், சிறுகுளங்கள், ஆறுகள், கால்வாய்கள்

61 நன்னீரில் வாழும் மீனினங்கள் எவை?

லூலா, கனயா, மகுரா, கவாய்யா, கொரலியா, கொடயா, ஹீங்கா, மஸ்பெத்தியா

62 இன்று நன்னீரில் வளர்க்கப்படும் மீனினங்கள் எவை?

கிராஸ்காப், பிக்கெட்காப், சில்வர்காப், கட்லாஸ் ரொகு, திலாப்பியா

63 இலங்கையின் கடற்கரையோர நீளம் எவ்வளவு? 1760 கிலோ மீற்றர்

64 உவர் நீர் மீன்பிடித்தொழில் இடம்பெறும் இடங்கள் எவை?

யாழ்ப்பாணம், புத்தளம், முந்தல், சிலாபம், நீர்கொழும்பு, அறுகம்குடா

65 இலங்கையின் விவசாயம் சார்ந்த பிரச்சினைகள் எவை?

பிரச்சினைகள்	அவற்றில் உள்ளடங்கும் உப பிரச்சினைகள்
நிலப்பயன்பாடு சார்ந்த பிரச்சினைகள்	• நிலப்பற்றாக்குறையும் நிலம் துண்டாடப்படுதலும் • விவசாய நிலங்களை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துதல் • ஒரே நிலத்தில் நீண்டகாலம் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதால் விளைச்சல் குறைவடைதல் • சனத்தொகை அதிகரிப்பினால் வீடு கட்டுவதற்கும், ஏனைய அபிவிரத்தி நோக்குகளுக்காகவும் நிலம் பயன்படுத்தப்படல்

செல்வச்சந்திரன்

www.lkedu.lk

உற்பத்தி சார்ந்த பிரச்சினைகள	• பழமை வாய்ந்த நிலங்களின் பயன்பாட்டினால் விளைச்சல் குறைவடைதல். • நிலத்துண்டாடலால் இயந்திரப் பாவனையை மேறகொள்ள முடியாமை • ஏக்கருக்கான விளைச்சல் குறைவடைந்தமை • வரண்ட வலயப் பிரதேசங்களில் நீர் பற்றாக்குறை, ஈரவலயங்களில் மேலதிக நீர் காணப்படல் • உரங்களின் விலையேற்றம்
வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகள	• உற்பத்தியைக் கொள்வனவு செய்கின்ற மத்திய நிலையங்கள் போதியளவு இல்லாமை.(நெல், மரக்கறி) • இடைத்தரகர்களின் செயற்பாட்டினால் விவசாயிகளின் வருமானம் குறைவடைதல். • உள்ளூர், சர்வதேச சந்தையில் ஏற்படும் விலைத் தளம்பல் • பிரதியீட்டுப் பொருட்களால் ஏற்படுகின்ற போட்டின் தன்மைகள் • வெளிநாடுகளுடனான போட்டி
சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள்	• பூச்சிகளிலிருந்து நோய்களையும் தொற்று நொய்களையும் எதிர்கொள்ளல் • வெள்ளப்பெருக்கு, மண்வரிவு, வரட்சி என்பவற்றினால் பயிர்களுக்கு தீங்கு ஏற்படுதல். • சூறாவளி, சமுத்திர நீரோட்டங்கள், சுனாமி காரணமாக மீன்பிடிக் கைத்தொழிலுக்குப் பிரச்சினைகள் உருவாதல் • உரம், கிருமிநாசினிகள், என்பவற்றினால் நீர், நிலம், வளி என்பன மாசடைதல் • சூழற் தொகுதியின் நிலைத்திருப்பிற்கு அவசியமான தாவரங்களும் விலங்குகளும் அழிவடைதல்

கோ.செல்வச்சந்திரன்

www.lkedu.lk

66 விவசாயத்தில் காணப்படும் நவீன போக்குகள் எவை?

நவீன போக்குகளின் வகை	உட்பிரிவின் முன்னேற்றங்கள்
உற்பத்தி சார்ந்த போக்குகள்	• உற்பத்தியை அதிகரிப்பதற்காக மானியத்தினைப் பெற்றுக் கொடுத்தல். • விவசாய உற்பத்திகளை பன்முகப்படுத்தல் • உள்நாட்டு நுகர்வு அதிகரித்தல் • விவசாயப் பயிர்களுடன் தொடர்புடைய ஊடு பயிர்களை அறிமுகப்படுத்தல். தென்னை – அன்னாசி, வெற்றிலை, கொடித்தொடை. இறப்பர் - கறுவா, கோப்பி, மிளகு • ஆராய்ச்சி நிறுவனங்கள் வெள்ளம் வரட்சியை எதிர்க்கக்கூடிய புதிய விதைகளை அறிமுகப்படுத்தின. • புதிய நிலங்களை பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்தல். (இறப்பர் - வவுனியா, முல்லைத்தீவு)
தொழினுட்பம் சார்ந்த போக்குகள்	• விலங்கு வேளாண்மையில் இயந்திரமயமாக்கலை அதிகரித்தல் • குளைந்த அளவு பட்டை வெட்டி பால் சேகரிக்கும் புதிய முறை அறிமுகம். • நவீன தொழில்நுட்பத்தினை உடைய இயந்திரங்களைப் பயன்படுத்தல்.(அறுவடை, நாற்று நடல், நெல் தூற்றுதல்)
வர்த்தகம் சார்ந்த நவீன போக்குகள்	• நுகர்வோரைக் கவரும் வகையில் கவர்ச்சிகரமாக விவசாய உற்பத்திகளை மேற்கொள்ளல். • புதிய பொதியிடல் முறையைப் பயன்படுத்தல். • வர்த்தக உற்பத்தியில் தனியார் நிறுவனங்களின் எழுச்சி
விவசாயத்திற்கான அரச ஆதரவு	• ஏற்றுமதி வரிச்சலுகை வழங்கல் • சந்தைச் சேவைகளை விரிவாக்கல் • உரமானியம் வழங்கல்(நெல், தேயிலை, தென்னை, இறப்பர்) • ஓய்வூதியத்திட்டம், காப்புறுதித் திட்டன் என்பவற்றை அறிமுகப்படுத்தல் • பயிற்சி நிலையங்களை அமைத்தல்(கன்னொறுவ, பட்டஅத்த இடங்களில் விவசாய தொழில் பூங்கா) • ஏற்றுமதிக் கிராமங்களை ஏற்படுத்தல். (நெல் - பொலநறுவை, குருநாகல், முந்திரி – தம்பதெனிய, வெற்றிலை – கட்டுகம்பொல, மிளகாய் - ராஜங்கனை)

www.lkedu.lk

www.lkedu.lk

67 இலங்கைப் பொருளாதாரத்தில் விவசாயத்தின் முக்கியத்துவங்கள் எவை?

1 விவசாயத்துறை மொத்த தேசிய உற்பத்தியில் 11.1 சதவீதமாக உள்ளது

2 ஏற்றுமதி வருமானத்தில் 24 சதவீதமாக உள்ளது.

3 விவசாயத்துறை சார்ந்த வேலைவாய்ப்பில் 31 சதவீதமாக உள்ளது.

4 நிலப் பயன்பாட்டில் பெரும்பகுதி விவசாயத்திற்குப் பயன்படல்.

5 உணவு உற்பத்தி மற்றும் கைத்தொழில்களுக்கு மூலப்பொருட்களை வழங்குதல்.

68 விவசாயத்துறையில் காணப்படும் வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்கள் எவை?

1 தேயிலை, இறப்பர், தெங்கு பெருந்தோட்டங்கள்

2 நெற்பயிர்ச்செய்கை – அரிசிமா, நூடில்ஸ், இனிப்புப் பலகார உற்பத்தி

3 சிறு ஏற்றுமதிப் பயிர் - பதனிடல்

4 மீன்பிடி

நா.செல்வச்சந்திரன்

www.lkedu.lk

அலகு 5

தயாரிப்புக் கைத்தொழில்கள்(பாடவேளை 14)

01 தயாரிப்புக் கைத்தொழில் என்றால் என்ன?

மனிதள் தனது திறன்கள், தொழினுட்ப அறிவு, மூலப்பொரட்கள் மற்றும் ஏனைய உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தி முடிவுப் பொருட்களையும், அகுறை முடிவுப் பொருட்களையம் உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள் ஆகும்.

02 18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட முக்கிய சம்பவமாக அமைவது எது?

கைத்தொழில் புரட்சி

03 உலகில் இடம்பெறும் முக்கிய தயாரிப்புக் கைத்தொழில்கள் எவை?

1 இரும்புருக்குக் கைத்தொழில்

2 மோட்டார் வாகனக் கைத்தொழில்

3 கப்பல் கட்டும் கைத்தொழில்

3 இலத்திரனியல் கைத்தொழில்

5 பருத்தி நெசவுக் கைத்தொழில்

நா.செல்வச்சந்திரன்

04 கைத்தொழில் அமைவிடத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?

1 மூலப்பொருள் - விவசாயம் சார் மூலப்பொரள், கனிய வளங்கள்

2 உழைப்பு - மனித உழைப்பு, இயந்திரங்கள்

3 சக்தி மற்றும் வலு – நிலக்கரி, அணுசக்தி, நிலநெய், நீர் மின்சாரம்

4 சந்தை - உள்நாடு, வெளிநாடு

5 போக்குவரத்து - நில, நீர், ஆகாய மார்க்கப் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து தொடர்பான தொழினுட்பங்கள்

6 முதலீடு – அரச, தனியார் துறை, பல்தேசியக் கம்பனி

7 உட்கட்டமைப்பு வசதிகள் - வங்கி, காப்புறுதி, தொடர்பாடல்

8 அரச கொள்கை - வரிச்சலுகைகள், விரிவாக்கம் தொடர்பான தீர்மானங்கள், கைத்தொழில் குடியிருப்பு, கைத்தொழில் கிராமங்கள், கைத்தொழில் நகரங்கள்

www.lkedu.lk

இரும்புருக்குக் கைத்தொழில்

05 உலகின் மிகப் புராதன கைத்தொழில் எது?

இரும்புருக்குக் கைத்தொழில்

06 இரும்புருக்குக் கைத்தொழில் துரித வளர்ச்சி அடைந்தமைக்கான காரணம் யாது?

கைத்தொழில் புரட்சி

07 ஆரம்பத்தில் இரும்புருக்குக் கைத்தொழில் மேற்கொள்ளப்பட்ட நாடுகளில் காணப்பட்ட வளங்கள் எவை?

1 இரும்புத்தாது

2 நிலக்கரி

3 சுண்ணக்கல்

08 இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உயர் அபிவிருத்தி மட்டத்தில் இரும்புருக்குக் கைத்தொழிலை மேற்கொண்ட நாட்டுக்கு உதாரணமாக அமைவது?

ஜப்பான்

செல்வச்சந்திரன்

09 இரும்புருக்குக் கைத்தொழிலின் பொதுவான இயல்கள் எவை?

1 ஒரு நாட்டின் தொழினுட்ப பலத்தினை தீர்மானிக்கின்ற கைத்தொழிலாக அமைந்துள்ளது.

2 உபகரணங்களின் உற்பத்திக்கும், மூலப்பொருளாகவும் அமைகின்றமை.

3 இரும்புப்படிவின் அடிப்படையில் இரும்புருக்கு உற்பத்தி செய்யப்படுகின்றது.

4 கழிவு இரும்பினைப் பல்வேறு உலோகங்களுடன் கலந்து உருக்கு உற்பத்தி செய்யப்படுகின்றது.

5 அலுமினியம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் இரும்புருக்கின் கேள்வி 65வீதமாக குறைந்தது.

6 ஏனைய கைத்தொழில்களுக்கு அடிப்படைக் கைத்தொழிலாக அமைந்துள்ளது.

7 தொடர்ச்சியாக விருத்தியடையும் தன்மையைக் கொண்டுள்ளது.(2000ஆம் ஆண்டு 70 மில்லியன் மெற்றிக் தொண்ணாக இருந்த உற்பத்தி 2012இல் 130 மில்லியனாக அதிகரித்தது)

www.lkedu.lk

10 கைத்தொழில் புரட்சியின் ஆரம்ப கட்டத்தில் இரும்புருக்கு பயன்படுத்தப்பட்ட துறைகள் எவை?

1 இயந்திரங்கள் 2 மின்சார உற்பத்திகள் 3 போக்குவரத்து

11 இரும்பருக்கு உற்பத்தியுடன் இணைந்த பல்வேறு பொருளாதார நடவடிக்கைகள் எவை?

1 போக்குவரத்து

2 விவசாயம்

3 தொடர்பாடல்

4 செய்மதி தொழினுட்பம்

4 ஆயுத உற்பத்தி


5 கட்டட நிர்மாணம்

12 பல்வேறு உலக நாடுகளில் இரும்புருக்கு நாடுகளும் அவற்றின் உற்பத்தி மையங்களும்

நாடுகள்	உற்பத்தி மையம்	இட அமைவில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணிகள்
சீனா	தெற்கு மஞ்சூரிய பிரதேசம், பீஜிங் பிரதேசம், சான்சிங்வான் பிரதேசம்	புவியின் மேற்பரப்பில் இரும்புத் தாது கிடைக்கின்றது.
ஜப்பான்	ஒசாக்கா, கோபே, கியோட்டோ வலயங்கள், டோக்கியோ, யோக்கஹாமா வலயம், வட கியூசு பிரதேசம், நாகோயா கைத்தொழில் வலயம்.	ஏற்றுமதி, இறக்குமதிக்கான துறை முக வசதிகளும், சந்தையும் காணப் படுகின்றமை.
ஐக்கிய இராச்சியம்	பர்மிங்ஹாம் பிரதேசம் தெற்கு வேல்ஸ் பிரதேசம் வடகிழக்குக் கடற்கரை பிர தேசம், லங்காசயர், பிரதேசம்.	இரும்புத்தாது, நிலக்கரி என்ப வற்றுக்கான இலகுவான அடை கையும் இரும்புத்தாதினை இறக் குமதி செய்வதற்கான துறைமுக வசதி காணப்படுகின்றமை.
ரஷ்யா	குஷ்நெட்ஸ் வலயம், மொஸ்கோ வடிநில வலயம், யூரல் வலயம்	அதிக இரும்பு உள்ளடகத்தைக் கொண்ட இரும்புத்தாது கிடைக் கின்றமை.
இந்தியா	மேற்குக் கைத்தொழில் வலயம், கிழக்கு கைத்தொழில் வலயம், தெற்குக் கைத் தொழில் வலயம்.	பீகார், ஒரிசா மாநிலங்களில் இரும்பு த்தாது கிடைக்கப் பெறுகின்றது. ஆற்று நீரின் மூலம் இலகுவான அடைகை.
ஐக்கிய அமெரிக்கா	மிக்சிக்கன் ஏரிக்கரைப் பிரதேசம், பிற்ஸ்பேர்க் பிரதேசம், டெற்றோயிட் கைத்தொழில் வலயம், நியூ இங்கிலாந்து பிரதேசம், தெற்கு அப்பலாச்சியன் பிரதேசம்	போக்குவரத்துக்கு ஏரியைப் பயன் படுத்த முடியும். ஏரிகளைச் சூழ்ந்து மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தமை.

www.lkedu.lk

13 பிரதான இரும்புருக்கு உற்பத்தி நாடுகள் எவை?



14 இரும்புருக்குக் கைத்தொழிலின் பிரதான பண்புகள் எவை?

1 நீண்டகாலம் நிலைத்திருக்கும் உறுதித்தன்மை.

2 அதிர்வுக்கு ஈடுகொடுக்கும் திறனும், நெகிழ்ச்சித் தன்மையும்.

3 அலுமினியம், செம்பு போன்ற உலோகங்களுடன் கலக்கும் போது அதன் தரத்தை உயர்த்தும்.

4 பாவனையில் இருந்து ஒதுக்கிய பின்னர் மீள்சுழற்சிக்கு உட்படுத்தலாம்.

5 பல்வேறு உற்பத்திகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

15 இரும்புருக்குக் கைத்தொழிலின் புதிய போக்குகள் எவை?

1 இரும்புத்தாதை உருக்குவதற்கு நிலக்கரிக்குப் பதிலாக மாறு சக்தி பயன்படுத்தப்படுதல். (மின்சார உலைகள்)

2 இரும்புருக்கு உற்பத்தியில் முன்னிலை வகித்த நாடுகள் படிப்படியாகச் சந்தையில் பின்னடைந்துள்ளமை(பிரித்தானியா)

3 உருக்குக்கான கேள்வி அதிகரித்தலும், கிழக்காசிய நாடுகளில் புதிய சந்தைகள் உருவாகியுள்ளமை.(சீனா, தென்கொரியா)

4 உருக்கை ஏற்றுமதி செய்யும் அதேநேரம் இறக்குமதியும் சில நாடுகளால் மேற்கொள்ளப்படுகின்றமை.(சீனா, தென்கொரியா)

www.lkedu.lk

5 மூலதனம், சந்தை முதலான காரணிகளின் அடிப்படையில் அமைவிடம் தீர்மானிக்கப்படுகின்றமை.(முன்னர் - இரும்புத்தாது, நிலக்கரி அமைந்துள்ள இடங்கள்)

மோட்டார் வாகனக் கைத்தொழில்

16 உலகில் துரிதமாக மாற்றமடைந்து வரும் கைத்தொழிலாக அமைவது எது?

மோட்டார் வாகனக் கைத்தொழில்

17 மோட்டார் வாகனங்கள் உற்பத்தி செய்யப்படுவதற்கான காரணங்கள் எவை?

1 மக்களின் பிரணாயத் தேவை

2 பொருட்களை ஏற்றி இறக்குதல்

18 தற்காலத்தில் மோட்டார் வாகனக் கைத்தொழிலில் காணப்படும் புதிய போக்காக அமையும் கைத்தொழில் எது? பொருத்தும் கைத்தொழில்

19 பொருத்தும் கைத்தொழில் விருத்திக்கு அடிப்படையாக அமையும் காரணிகள் எவை?

1 தொழிற்பிரிப்பு

2 சிறப்புத் தேர்ச்சி

3 தொழினுட்ப அபிவிருத்தி

நா.செல்வச்சந்திரன்

20 மோட்டார் வாகனங்களின் பல்வேறு வடிவங்கள் எவை?

லொறி, கார், டிப்பர், வான், பஸ், றக்

21 வாகனங்கள் எவற்றின் அடிப்படையில் ஒன்றுக்கொன்று வேறுபட்டுள்ளன?

1 உட்கட்டமைப்பு வசதி 2 வாகனத்தின் வடிவம் 3 வாகனத்தின் பருமன்

22 கடந்த காலங்களில் அபிவிருத்தியடைந்த நாடுகள் மோட்டார் வாகன உற்பத்தியில் முன்னிலை பெற்றமைக்கான காரணம் யாது?

பெருளமவு மூலதனத்தை முதலிட வேண்டியுள்ளமையால்.

23 மோட்டார் வாகனத்தின் வடிவம் காலத்திற்குக் காலம் வேறுபடுவதற்கான காரணங்கள் எவை?

1 நுகர்வோரின் விருப்பம் 2 பயன்பாடு

www.lkedu.lk


24 2012இன் பின்னர் மோட்டார் வாகன உற்பத்தியில் முன்னிலை பெற்ற நாடு எது?

சீனா

25 2012இன் பின்னர் மோட்டார் வாகன கைத்தொழிலில் துரித வளர்ச்சியடைந்த நாடுகள்

எவை? சீனா, ஜப்பான், தென்கொரியா, இந்தியா, தாய்லாந்து

26 மோட்டார் வாகனக் கைத்தொழிலிலில் ஈடுபடும் முக்கிய நாடுகள் எவை?



27 மோட்டார் வாகன கைத்தொழிலின் பண்புகள் எவை?

1 துரிதமாக மாற்றமடைந்து வரும் கைத்தொழிலாக மாறிவருதல்.

2 நவீன தொழில்நுட்பத்திறன்களையும் பொறியியல் உழைப்பையும் உச்ச அளவில் பயன்படுத்தல்.(ரோபோ தொழினுட்பம்)

3 பாரியளவு மூலதனம் தேவைப்படல்

4 உற்பத்தி பெரும்பாலும் பல்தேசியக் கம்பனி சார்ந்தது.

5 ஒன்றிணைந்த நிறுவனங்கள் மூலம் உற்பத்தி மேற்கொள்ளப்படல். (சீனாவின் ஷாங்காய் கம்பனியுடன் அமெரிக்காவின் ஜெனரல் மோட்டார் நிறுவனமும் ஒன்றிணைப்பு)

6 மலிவான தொழிலாளர், மூலப்பொருட்கள் கிடைக்கக்கூடியதன'மை? வெளிநாட்டு சந்தைகள் போன்ற காரணங்களினால் ஜப்பான், .ந்தியா, தென்கொரியா, சிங்கப்பூர், இந்தோனேசியா போன்ற நாடுகளில் துரித வளரர்ச்சி ஏற்பட்டுள்ளமை.

www.lkedu.lk

28 மோட்டார் வாகன கைத்தொழிலின் புதிய போக்குகள் எவை?

1 உதிர்பாகங்களை பொருத்தும் கைத்தொழிலாக விரிவடைந்து வருதல். (தாய்வான், தென்கொரியா, சிங்கப்பூர், இந்தோனேசியா)

2 அதி சொகுசு வாகனங்களை உற்பத்தி செய்தல்.

3 பொருட்களைக் கொண்டு செல்வதற்குப் பொருத்தமான விசேட மோட்டார் வாகனங்களை வடிவமைத்தல். (எரிபொருள், பால், வாயு)

4 நீர், நிலம் இரண்டிலும் சேர்ந்து பயன்படுத்தக்கூடிய வாகன உற்பத்தி.

5 ஆரம்ப காலங்களில் மோட்டார் வாகனங்களை உற்பத்தி செய்யாத நாடுகள் இக்கைத்தொழிலுக்கு பங்களிப்புச் செய்கின்றமை.(இலங்கை)

6 சூழல் மாசடைதலை இழிவளவாக்குகின்ற சூழல் நேய வாகனங்களை உற்பத்தி செய்தல்.

7 எரிபொருள் நுகர்வில் அதிகம் தங்கியிருப்பதால் சிறிய வாகனங்களை உற்பத்தி செய்வதில் ஆர்வம்.

8 அதி உச்சப் பாதுகாப்பும் பல்வேறு வசதிகளையும் உறுதிப்படுத்தக்கூடிய அமைப்புகளை ஏற்படுத்தல்.(பூகேன் நிலைப்படுத்தும் முறைமை, தொலைக்காட்சி, குளிரூட்டி, இருக்கைகளுடன் இணைந்த குளிர்சாதனப் பெட்டிகள், தன்னியக்க கதவுகள்)

செல்வச்சந்திரன்

கப்பல் கட்டும் கைத்தொழில்

29 கப்பல் கட்டும் கைத்தொழில் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய அம்சங்கள் எவை?

1 ஐரோப்பியரது நாடுகாண் பயணங்கள்.

2 இரும்புருக்குக் கைத்தொழிலின் அபிவிருத்தி

www.lkedu.lk

30 ஐரோப்பாவில் கப்பல் கட்டும் வகைத்தொழிலின் விருத்தியில் பங்களிப்புச் செய்த காரணிகள் எவை?

1 கப்பல் கட்டுவதற்குத் தெவையான இரும்புருக்கு மற்றும் மரங்கள் கிடைத்தமை.

2 கப்பல்களை நிறுத்தி வைப்பதற்குத் தேவையான பாதுகாப்பான கரையோரப் பகுதிகள் காணப்பட்டமை

3 அரச ஆதரவு கிடைத்தமை.

4 கடற் பிரயாணம், வர்த்தகம், மீன்பிடி, போர் போன்றவற்றால் கப்பல்களுக்கு கேள்வி அதிகரித்தமை.

31 ஆரம்ப காலத்தில் விருத்தயடைந்த நாடுகள் மட்டும் கப்பல் கட்டும் கைத்தொழிலில் ஈடுபட்டமைக்கான காரணங்கள் எவை?

1 பாரியளவான பணத்தினை முதலிட வேண்டியிருந்தமை.

2 நன்மதிப்பு மற்றும் அனுபவம் காணப்பட்டமை.

3 மூலப்பொருளான இரும்புருக்கினை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தமை.

32 தற்காலத்தில் ஆசிய நாடுகளான சீனா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் கப்பல் கட்டும் கைத்தொழிலில் முன்னிலை வகிப்பதற்கான காரணங்கள் எவை?

1 புதிய தொழினுட்பங்கள் காணப்படுகின்றமை.

2 கைத்தொழிலுக்குத் தேவையான மலிவான திறன்மிக்க தொழிலாளர்கள் கிடைக்கின்றமை.

3 கப்பல் தளங்களுக்கு வசதியாகப் பனிப்போரவையற்ற ஆழமான கடற்பகுதிகள் காணப்படுதல்.

33 கப்பல் கட்டும் கைத்தொழிலின் பண்புகள் எவை?

1 பயணிகள் போக்குவரத்து இல்லது பல்வேறுபட்ட நுகர்வுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கான விசேடமான கப்பல்களைக் கட்டுதல்.

2 பாரிய அதிசொகுசுப் பயணிகளுக்கான கப்பல்களைக் கட்டுதல்.

3 பல்வேறுபட்ட தேவைகளுக்காக கப்பல்களைக் கட்டுதல்.(யுத்தங்கள், கடல் ஆய்வு, மீன்பிடித் தொழிற்சாலை, வாசிக சாலைகள்)

www.lkedu.lk

34 கப்பல் கட்டும் கைத்தொழிலின் புதிய போக்குகள் எவை?

1 ஆரம்ப காலங்களில் மூலப்பொருளாக இரும்புருக்கு பயன்படுத்தப்பட்ட போதும் இன்று பாரம் குறைந்த உலோகங்கள் மற்றும் பல்வேறு வகையான நூலிழைகள் பயன்படுத்தப்பட்டு இலகு மரக்கப்பல்கள் கட்டப்படுதல்.

2 பரெருத்தும் கைத்தொழில் வளர்ச்சி அடைந்துள்ளது.

3 மனித தொழிலாளர்களை விட அதிகளவில் பொறியியல் தொழிலாளரின் பயன்பாடு காணப்படல்.

4 GPS முறைமைகள் போன்ற வளர்ச்சியடைந்த தொழினுட்ப முறைகள் புகுந்துள்ளமை.

5 பாரம்பரிய கப்பல் கட்டும் நாடுகளுடன் போட்டியிட்டு சீனா, தென்கொரியா போன்ற நாடுகள் முன்னிலை பெற்றுள்ளமை.

இலத்திரனியல் கைத்தொழில்

35 இலத்திரனியல் கைத்தொழிலின் முக்கிய உற்பத்திப் பொருட்கள் எவை?

1 வானொலி 2 கணினி

நா.செல்வச்சந்திரன்

3 தொலைக்காட்சி 4 தொடர்பாடல் உபகரணங்கள்

5 மருத்துவ உபகரணங்கள் 6 ரோபோக்கள்

7 புகைப்படக் கருவிகள்

36 முன்னணி இலத்திரனியல் கைத்தொழில் நாடுகள் எவை?

1 சீனா 2 ஜப்பான்

3 ஐரோப்பிய நாடுகள் 4 வட அமெரிக்கா நாடுகள்

37 இந்நாடுகளில் இலத்தரனியல் உபகரணங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறு துறைகள் எவை?

1 தரவுச் செயன்முறை உபகரணங்கள்

2 தொடர்பாடல் உபகரணங்கள்

3 கைத்தொழில் மற்றும் மருத்துவ உபகரணங்கள்

4 கட்புல செவிப்புல உபகரணங்கள்

5 மோட்டார் வாகனத்துக்கான உபகரணங்கள்

www.lkedu.lk

38 2000 – 2010 காலப்பகுதிகளில் கிழக்காசிய வலயத்தில் இலத்திரனியல் கைத்தொழில் துறையில் பலம் வாய்ந்த நாடாக விளங்குவது?

சீனா

39 இலத்திரனியல் சார்ந்த உப உற்பத்திகளுக்கு சீனாவால் வழங்கப்படும் பங்களிப்புக்கள் எவை?

1 லேசர் இறுவட்டு 2 புகைப்படக் கருவிகள்

3 கணினிகள் 4 கையடக்கத் தொலைபேசிகள்

40 சீனாவின் இலத்திரனியல் கைத்தொழிலுக்கு பிரதான சந்தையாக விளங்குவது?

இலங்கை

41 இலத்திரனியல் கைத்தொழிலின் பண்புகள் எவை?

1 பாரியளவு மூலதனம் முதலிடப்பட்டுள்ளமை.

2 இறுதி உற்பத்தி வரைக்கும் ஆராய்ச்சி தொடர்வதுடன் உற்பத்திக்கு மட்டுமன்றி கைத்தொழில் தொடர்பான ஆராய்ச்சிக்கும் இரண்டு மடங்கான பணம் செலவிடப்படுகின்றமை.

செல்வச்சந்நிதி

3 உற்பத்திக்கான பங்களிப்பும் உரிமையும் பெரும்பாலும் பல்தேசியக் கம்பனிகளின் உரித்தாக உள்ளமை.

4 பெரும்பாலன பணியாளர்கள், விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், பயிற்றப்பட்ட தொழினுட்பவியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சி ஆளணியினராகக் காணப்படுகின்றமை.

5 சேவைக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆளணியினரில் அரைப்பங்கினர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறைகளில் ஈடுபட்டுள்ளமை.

42 இலத்திரனியல் கைத்தொழிலின் போக்குகள் எவை?

1 புதிய உற்பத்திகள் சந்தையின் போட்டிநிலைக்கு ஏற்றவாறு நாளுக்கு நாள் வெளிடப்படுகின்றமை.(கைத்தொலைபேசிகள், புகைப்படக் கருவிகள், தொலைக் காட்சிகள்)

2 மிக நுட்பம் வாய்ந்த உபகரணங்களினதும் உதிரிப்பாகங்களினதும் உற்பத்தி

3 உபகரணங்களை ஏற்றுமதி செய்கின்ற அதே நாடுகள் அதே உற்பத்திகளை ஏனயை நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்கின்றன.

www.lkedu.lk

4 பொருத்தும் கைத்தொழிலாக நிர்வகிக்கப்படுகின்றமை.

5 உபகரணங்களின் ஒற்பத்திக்கும், வர்த்தகத்துக்கும் மேலதிகமாக உப உற்பத்திகளுக்கான சந்தைகளும் உருவாக்கப்பட்டுள்ளமை.(கணிணிகளுக்கான வைரஸ், காந்த வட்டுக்கள், இறுவட்டுக்கள்)

பருத்தி நெசவுக் கைத்தொழில்

43 கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து முறைசார்ந்த மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட கைத்தொழிலாக விரிவடைந்த கைத்தொழில் எது?

பருத்தி நெசவுக் கைத்தொழில்

44 கைத்தொழில் புரட்சிக் காலத்தில் பருத்தி நெசவுக் கைத்தொழிலில் தனியுரிமை பெற்று விளங்கிய நாடு எது?

பிரித்தானியா

45 பிற்காலத்தில் இக்கைத்தொழிலில் ஈடுபட்ட நாடுகள் எவை?

சீனா, இந்தியா, ஜப்பான், எகிப்து

46 இந்நாடுகளில் இக்கைத்தொழிலில் விருத்தியடைந்தமைக்கான காரணங்கள் எவை?

செல்வச்சந்திரன்

1 பருத்தியை இலகுவில் பயிர் செய்யக் கூடியதாக இருந்தமை.

2 பருத்தியை வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யக் கூடியதாக இருந்தமை.

3 மலிவாக தொழிலாளர்களைப் பெறக் கூடியதாக இருந்தமை.

4 நவீன தொழினுட்பம் காணப்பட்டமை.

5 போதியளவு சந்தை காணப்பட்டமை

www.lkedu.lk

47 பருத்தி நெசவுக் கைத்தொழிலில் ஈடுபடும் நாடுகளும் பிரதேசங்களும்



48 பருத்தி நெசவுக் கைத்தொழிலிலின் பண்புகள் எவை?

1 நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளமை.

2 விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருட்களை நிர்வகித்தல்.

3 இயந்திரமயமாக்கப்பட்டதன் விளைவாக உயர் தரத்திலான புடவைகள் உற்பத்தி செய்யப்பட்டமை

4 சூழல் நேய உற்பத்தியாக உள்ளமை

49 பருத்தி நெசவுக் கைத்தொழிலின் போக்குகள் எவை?

1 பருத்தி பயிரிடும் நாடுகளும் உற்பத்தியில் ஈடுபடுகின்றமை.

2 கிழக்காசிய நாடுகள் மன்னணி உற்பத்தியாளராகத் தோற்றம் பெற்றுள்ளமை.

3 இயந்திரமயமாக்கப்பட்டதன் விளைவாக உயர் தரத்திலான புடவைகள் உற்பத்தி செய்யப்பட்டமை

4 பருத்தியுடன் ஏனைய நாரிழைகளைக் கலந்து உயர் தரத்திலான பல்வகைப் புடைவைகளை உற்பத்தி செய்தல்.

5 துணிகளுக்கு வர்ணமிடல், ஆடை உற்பத்தி என்பவை உள்ளிட்ட உப உற்பத்திக் கைத்தொழிலின் தோற்றம்.

www.lkedu.lk

50 உலகில் தயாரிப்புக் கைத்தொழிலோடு தொடர்புடைய பிரச்சினைகள் எவை?

துறைகள்	பிரச்சினைகள்
மூலப்பொருள் சார்ந்த பிரச்சினைகள்	• நீண்டகாலப் பாவனையினால் மூலப்பொருள் குறைவடைதல். • இயற்கை மூலப்பொருட்களுக்குப் பதிலாகச் செயற்கை மூலப்பொருள் பயன்படுத்தப்படுகின்றமை.
தொழிலாளர் சார்ந்த பிரச்சினைகள்	• இயந்திரப் பாவனை அதிகரித்தமையால் வேலையில்லாப் பிரச்சினை ஏற்பட்டுள்ளமை. • பயிற்றப்பட்ட தொழிலாளர்களின் பற்றாக்குறை • தொழிலாளர்களுக்கான செலவு உயர்வடைதல். • தொழிலாளர் சார்ந்த பிரச்சினைகளின் தோற்றம்.
சுற்றாடல் பிரச்சினைகள்	• நிலம், நீர், வளி, சமுத்திரப் படுக்கைகள் மாசடைதல். • குறித்த தவாரங்கள், விலங்கினங்கள் அருகிச் செல்லுதல். • கைத்தொழில் கழிவுகளின் வெளியேற்றம். • பூகோள வெப்பநிலை அதிகரிப்பு, காலநிலை மாற்றம், அமில மழை பொழிதல், தரைக்கீழ் நீர் மாசடைதல். • இலத்திரனியல், உபகரணக் கழிவுகள் சூழலில் அதிகளவில் சேர்தல்.
சமூக, பொருளாதார பண்பாட்டுப் பிரச்சினைகள்	• பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கம் அதிகரித்தல். • இலத்திரனியல் பொருட்களை திருத்துவதற்கான செலவுகள் அதிகம். • நுகர்வேரை திருப்திப்படுத்தவதை விடுத்து இலாப நோக்கம் கொண்ட உற்பத்திகள். • யுத்த தளபாடங்களின் உற்பத்தி உலக சமாதானத்துக்கு அச்சுறுத்தலாக இருத்தல். • குற்றச் செயல்கள், மோசடி, களவுகளில் ஈடுபடத் தூண்டப்படுதல். • சேரிப்புறங்கள் உருவாதல்
சந்தை சார்ந்த பிரச்சினைகள்	• மேற்கு ஐரொப்பாவின் மரபுரிமையாகக் காணப்பட்ட சந்தை கிழக்காசிய வலயத்திற்கு மாறியுள்ளமை. • ஐரோப்பிய நாடுகள் பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளாகியுள்ளமை. • விளம்பரங்களுக்கான செலவினை பொருட்களின் விலையுடன் சேர்ப்பதனால் பொருட்களின் விலை அதிகரித்தல். • பல்வேறு நுகர்வுப் பொருட்கள் சார்ந்த பிரதியீட்டுப் பொருட்கள் சந்தைக்கு வருதல்.
சக்தி மற்றும் வலு தொடர்பான பிரச்சினைகள்	• கனிய எண்ணெய் விலை தளம்பலுக்கு உட்படுதல். • சக்தி, வலு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமை • சக்தி மூலவளங்களைக் கொண்டுள்ள நாடுகளில் ஏற்பட்டுள்ள முடிவில்லாத அரசியல் பிரச்சினை • அணுச் சக்தியினால் சூழலியல் பிரச்சினை ஏற்படல் • சட்ட ரீதியற்ற முறையில் அணுசக்தியை வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தல்.

www.lkedu.lk

அலகு 6

www.lkedu.lk

இலங்கையின் கைத்தொழில்கள் சிலவற்றின் பரம்பல் பிரச்சினைகளும் போக்குகளும் (பாடவேளை 16)

01 புராதன காலத்தில் இலங்கையில் விருத்தியடைந்திருந்த கைத்தொழில்கள் எவை?

1 புடைவைக் கைத்தொழில் 2 நிர்மாணக் கைத்தொழில்

3 சிற்பக்கலை 4 நீர்ப்பாசனம்

5 சாயப்பூச்சுக்கலை

02 புராதன காலத்தில் கைத்தொழில் இடம்பெற்றமைக்கான ஆதாரங்கள் கிடைக்கபபெற்றுள்ள இடங்கள் எவை?

1 சமனெலவெல(சமனெலவாவி) - இரும்புத்தாது உருக்குதல்

2 மாந்தை - கப்பல் கட்டும் தொழில்

03 பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் வளர்ச்சியடைந்த கைத்தொழில்கள் எவை?

1 மூலப்பொருள் உற்பத்தி 2 சுரங்கக் கைத்தொழில்

04 இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் எவ் அமைப்பின் கீழ் கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன? அரச வியாபாரத் திணைக்களம்

05 அவந்நிறுவனத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில்கள் எவை?

உலோகப் பொருட்கள், கடதாசி, ரயர் ரியூப், ஒட்டுப்பலகை

06 இலங்கையில் திறந்த பொருளாதாராக் கொள்கை கொண்டு வரப்பட்ட ஆண்டு எது?

1977

07 இலங்கையில் இடம்பெறும் கைத்தொழில்கள் எவை?

1 காரீயக் கைத்தொழில் 2 பீங்கான் தொடர்பான கைத்தொழில்

3 இலத்திரனியல் கைத்தொழில் 4 பெற்றொலிய இரசாயனக் கைத்தொழில்

5 மோட்டார் வாகன ஒருங்கிணைப்பு மற்றும் படகு கட்டும் கைத்தொழில்

6 உணவு, பான வகைகளுடன் தொடர்புடைய கைத்தொழில்கள்

7 குடிசைக் கைத்தொழில் 8 சுற்றுலாக் கைத்தொழில்

காரீயக் கைத்தொழில்

08 காரீயக் கைத்தொழில் எத்தனை ஆண்டுகால வரலாற்றைக் கொண்டது? 160

www.lkedu.lk

09 உயர் தரமான காரீயத்தை ஏற்றுமதி செய்யும் நாடு எது? இலங்கை

10 காரீயத்தின் வகைகளையும் அவை பரம்பியுள்ள இடங்களையும் அவற்றிலிருந்து பெறப்படும் உற்பத்திகளையும் அட்டவணைப்படுத்துக.

கனிப்பொருள்	பரம்பியுள்ள பகுதிகள்	உற்பத்தியும் பயன்பாடும்
காரீயம்	கஹட்டகா சுரங்கம் கொலன்கஹா சுரங்கம் போகல ரங்கல சியம்பலாபிட்டிய போத்தல ரா கெதர	• பென்சில்கூர் • மினுக்கி (Polish) • மசகுப் பொருள் • தீந்தைகள் • மின் கலத்திற்கான மூலப் பொருள். • உருக்குகள்.
மைக்கா	தலாகொட, மடுமான பல்லேகலை, தலாவத்துஓயா மயிலபிட்டிய, பின்னவல பதுளை, துட்டுவெவ கொடகவெல.	• இலத்திரனியல் கடத்திகள். • இலத்திரனியல் உபகரணங்கள் • பிளாஸ்டிக் உற்பத்திகள். • கொதிகலன்களுக்கான உறைகள். • இறப்பர் பொருட்கள்.

11 இலங்கையிடமிருந்து அதிகளவு காரீயத்தை இறக்குமதி செய்யும் நாடுகள் எவை?

ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம்

12 காரீயக் கைத்தொழில் தொடர்பான பிரச்சினைகள் எவை?

1 காரீயம் வெட்டி எடுப்பதற்கு அதிக செலவு ஏற்படுதல்

2 தொழிலாளர் பிரச்சினை (சம்பளம், சுகாதாரம், தொழில்நுட்பம்)

3 அகழ்வின் போது சுற்றாடல் மாசடைதல்.

4 உற்பத்தியின் அளவு படிப்படியாகக் கறைவடைதல்

5 சிறிய அளவு மட்டுமே உள்ளூர் கைத்தொழில்களுக்குப் பயன்படுகின்றமை

www.lkedu.lk

13 காரீயக் கைத்தொழிலின் போக்குகள் எவை?

1 அரச கட்டுப்பாட்டின் கீழ் தனியார் துறையினரால் தற்பொழுது காரிய அகழ்வு பராமரிக்கப்பட்டு வருகின்றமை.

2 அகழ்வின் போது நவீன நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றமை.

3 தொழிலாளர்களுக்கு ஏற்படும் ஆபத்துக்கள் குறைக்கப்பட்டுள்ளமை.

4 ஐரோப்பிய கொள்வனவாளருக்கும் பதிலாக ஆசிய நாடுகளும் கொள்வனவாளர்களாக மாறியுள்ளமை.

பீங்கான் களி தொடர்பான கைத்தொழில்

14 இலங்கையில் பீங்கான களி கைத்தொழிலின் மூலப்பொருட்களாக அமைபவை எவை?

1 வெண்களி – உயர்தரமான பீங்கான் உற்பத்தி

2 பந்துக்களி – தரைஓடுகள், மட்பாண்டப் பொருட்கள்


15 பீங்கான் களி பரவிக் காணப்படும் பிரதேசங்களையும் அவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களையும் அட்டவணைப்படுத்திக் காட்டுக.

சசந்தன்

பீங்கான்களி படிவுகளின் அமைவிடம்	கைத்தொழில்களின் அமைவிடம்	பீங்கான்களி தொடர்பான உற்பத்திகள்
வெண்களி பொரலஸ்கமுவ மிட்டியாகொட ரத்தோட்ட **பந்துக்களி** தெதியவல	தங்கொட்டுவ நீர் கொழும்பு பிலியந்தல மீப்பே ஹொரண ரத்தோட்ட	● மட்பாண்டப் பொருட்கள் ● ஓடுகள் ● அலங்காரப் பொருட்கள் ● சுகாதாரப் பொருட்கள் இதற்கு மேலதிகமாக வர்ண வகைகள், றப்பர் உற்பத்தி, பற்பசை, அலங்கார வகைகள், கடதாசி போன்றவற்றிற்கும் பீங்கான் களி பயன்படுத்தப் படுகிறது.

www.lkedu.lk

16 இலங்கையில் சில கனிப்பொருட்களின் பரம்பல்



www.lkedu.lk

17 பீங்கான் களி கைத்தொழில் தொடர்பான பிரச்சினைகள் எவை?

1 களிப் படிவுகள் குறைவடைந்து போதல்

2 களியை சுத்தம் செய்வதற்கும், சீர்செய்வதற்கும் அதிக செலவு ஏற்படுதல்.

3 மட்பாண்ட உற்பத்திச் செலவு அதிகரித்தல்.(மெழுகு, சக்தி, வலு)

4 வர்த்தகப் பொருட்களின் விலை அதிகரிப்பு

5 களி அகழ்வினால் சுற்றுச்சூழல் மாசடைதல்.

18 பீங்கான் களி கைத்தொழில் தொடர்பான போக்குகள் எவை?

1 இக்கைத்தொழில் முழுமையாகத் தனியார் துறையினரால் மேற்கொள்ளப்படுதல்.

2 உள்ளூர், சர்வதேச சந்தைகள் இரண்டிலும் உற்பத்திகளுக்கு உயர்ந்த அங்கீகாரம்

3 மட்பாண்ட அலங்காரப் பொரட்களுக்கு உயர்ந்த வெளிநாட்டுக் கேள்வி

4 உயர்தரத்திலான பெரிய தரைஓடுகளின் உற்பத்தியினை விரிவுபடுத்தல்.

5 உயர் தொழினுட்பம், பயிற்றப்பட்ட தொழிலாளர் பயன்படுத்தப்படல்.

நா.செல்வச்சந்திரன்

இலத்திரனியல் கைத்தொழில்

19 உலகில் அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு உயர் வருமானம் தருகின்ற கைத்தொழிலாக அமைவது எது? இலத்திரனியல் கைத்தொழில்

20 இலத்திரனியல் உபகரணங்கள் எவை?

வானொலி. தொலைக்காட்சி, கணிணிகள், தொலைக்காட்சி கட்டுப்பாட்டு கருவி, சமிக்ஞை உபகரணங்கள்,

21 இலத்திரனியல் கைத்தொழில் பரவியுள்ள இடங்கள் எவை?

கொழும்பு, அதனை அண்டிய வலயங்கள், முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள்

22 இக்கைத்தொழில் தொடர்பான பிரச்சினைகள் எவை?

1 இலத்திரனியல் உபகரணங்களின் உற்பதி பெரும்பாலும் ஏற்றுமதியிலேயே தங்கியுள்ளது.

2 தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக பெருந்தொகையான உற்பத்திகள் குறுகிய காலத்தில் காலவதியாகிவிடுகின்றமை.

www.lkedu.lk

3 கலாசதியான கழிவுகள் சூழலில் கொட்டப்படுவதால் மோசமான பாதிப்புக்கள் ஏற்படுகின்றமை.

4 கையடக்கத்தொலைபேசி போன்ற இலத்திரனியல் உபகரணங்களின் பாவனையினால் சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளமை.

23 இக்கைத்தொழிலின் போக்குகள் எவை?

1 நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புக்களை வழங்கிகுகின்றமை.

2 உயர்கல்வி, பாடசாலைக் கலைத்திட்டம் ஊடாக உயர் தொழில்நுட்பம் கற்பிக்கப்படுவதால் திறன்மிக்க பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் உருவாக்கப்படுகின்றமை.

3 பொருத்தும் கைத்தொழில் நகரப் பகுதிகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை.

4 ஏற்றுமதி செய்யும் இலத்திரனியல் உபகரணங்களின் உயர் தரமும், தொழில் நுட்பங்களும் உள்ளூர் உற்பத்திகளில் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோலிய இராசாயனக் கைத்தொழில்

24 பெற்றோலிய இரசாயனக் கைத்தொழில் எனின்றால் என்ன?

நா.செல்வச்சந்திரன்

சுத்திகரிப்பு ஆலையில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் திரவ எரிபொருட்களைப் பெற்றதன் பின்னர் மிகுதியாகும் பொருட்கள் மூலம் ஏனைய உபபொருட்களை உற்பத்தி செய்யும் ஒரு தொழிலாகும்.

25 பெற்றோலிய இரசாயனக் கைத்தொழிலின் பண்புகள் எவை?

1 சுத்திகரிக்கப்படாத எண்ணெயின் இயலளவில் தங்கியிருத்தல்.

2 இதன் உற்பத்தியின் அளவு அதிகரிப்பானது கிடைக்கக்கூடிய மூலப்பொருள் தேவையின் அளவில் தங்கியிருத்தல்.

3 மூலதனச் செறிவுமிக்க கைத்தொழிலாகும்.

4 போதுமான இயந்திரங்களும், புதிய தொழில்நுட்ப முறைகளும் பயன்படும்.

26 எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடம் எது?

களனிக்கு அருகில் உள்ள சப்புகஸ்கந்தவில்

www.lkedu.lk

27 பெற்றோலிய இரசாயனக் கைத்தொழிலுடன் தொடர்பான உற்பத்திகள் எவை?

1 பிளாஸ்ரிக் 2 களைகொல்லி 3 இரசாயன உரங்கள்

4 மருந்துகள் 5 வாசனைப் பொருட்கள் 6 சர்ணங்கள்

7 அழகுசாதனப் பொருட்கள் 8 செயற்கை இறப்பர்

28 பெற்றோலிய இரசாயனக் கைத்தொழிலுடன் தொடர்புடைய பிரச்சினைகள் எவை?

1 சுத்திகரிக்கப்படுவதற்காக இறக்குமதி செய்யப்படும் எண்ணெயின் அளவில் தங்கியிருத்தல்.

2 கனிய எண்ணெயின் விலை உயர்வால் இக்கைத்தொழில் மோசமாகப் பாதிக்கப்படும்.

3 உற்பத்திச் செலவு அதிகரிப்பதால் வர்த்தகப் பொருட்களின் விலை அதிகரிக்கும்.

4 மூலதனச் செறிவான கைத்தொழிலாக இருப்பதனால் மூலதனப் பற்றாக்குறை இக்கைத்தொழிலைப் பாதிக்கின்றது.

5 இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களுடன் சந்தையில் போட்டி காணப்படுகின்றது.

நா.செல்வச்சந்திரன்

29 பெற்றோலிய இரசாயனக் கைத்தொழிலின் போக்குகள் எவை?

1 இக்கைத்தொழில் பொருட்களுக்கு கேள்வி அதிகரித்தல்.

2 உற்பத்திப் பொருட்களின் தொகையும் வருமானமும் உயர்ந்து காணப்படுகின்றமை.

3 நகரப் பிரதேசங்களில் கைத்தொழிற்சாலைகள் அமைந்துள்ளமை.

4 உள்ளூர் சந்தை விரிவடைந்து காணப்படுதல்.

5 சந்தையில் போட்டி அதிகமாக இருத்தல்.

www.lkedu.lk

மோட்டார் வாகனக் கைத்தொழில்

30 இலங்கையில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழிலாக அமைவது எது?

மோட்டார் வாகனப் பொருத்தும் கைத்தொழில்

31 மோட்டார் வாகன பொருத்தும் கைத்தொழில் ஆரம்பிக்கப்பட்டமைக்கான காரணங்கள் எவை?

1 மோட்டார் வாகனங்களுக்கான அதிக கேள்வி

2 இறக்குமதி செய்யும் வாகனங்களின் அதிகரித்த விலை

32 இலங்கையில் உள்ள மோட்டார் வாகன பொருத்தும் கைத்தொழில் நிறுவனங்கள் எவை?

1 உபாலி பியட் 2 மெஸ்ட்டா

33 சிறிய மோட்டார் வாகன பொருத்தும் கைத்தொழில் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?

2001

34 பிரதான மைக்ரோ மோட்டார் வாகன பொருத்தும் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?

பொல்காவலை

நா.செல்வச்சந்திரன்

35 மோட்டார் வாகன பொருத்தும் கைத்தொழில் தொடர்பான பிரச்சினைகள் எவை?

1 உயர் மட்டத் தொழில்நுட்பத் திறன்களைப் பயன்படுத்தும் பெரிய தொழிற்சாலைகள் இன்மை.

2 இறக்குமதி செய்யப்படுகின்ற மோட்டார் வாகனங்களுடன் போட்டி நிலவுதல்.

3 மூலதனப் பற்றாக்குறை

4 பிரதான கைத்தொழிலாக பரம்பல் அடையாமை.

36 மோட்டார் வாகன பொருத்தும் கைத்தொழிலின் போக்குகள் எவை?

1 பல்வேறுபட்ட மாதிரிகளில் மோட்டார் வாகனங்களைப் பொருத்துதல்.

2 அரச ஆதரவு கிடைக்கின்றமை.

3 உற்பத்தித் தரத்தில் படிப்படியான விருத்தி காணப்படுதல்.

4 உள்நாட்டுக் கைத்தொழிலாக வலுப்பெற்று வருகின்றமை.

5 புதிய தொழில்நுட்பம், பல்வேறுபட்ட உதிரிப்பாகங்கள் இணைந்த உற்பத்தி

www.lkedu.lk

படகு கட்டும் கைத்தொழில்

37 படகு கட்டும் கைத்தொழிலின் விருத்திக்கான காரணிகள் எவை?

1 உல்லாசப் பயணத்துறையின் வளர்ச்சி

2 மீன்பிடிச் செயற்பாடுகளின் விரிவாக்கம்

3 நடுத்தர, சிறிய படகுகளுக்கான கேள்வி உள்நாட்டில் அதிகரித்தமை.

38 எமது நாட்டிலிலிருந்து படகுகளை இறக்குமதி செய்யும் நாடுகள் எவை?

இந்தியா, மாலைதீவு, சிங்கப்பூர், நோர்வே, தென்கொரியா

39 உற்பத்தி செய்யப்படும் படகு வகைகள் எவை?

1 மீன்பிடிப் படகுகள் 2 பிரயாணப் படகுகள் 3 அதிக வேகமான படகுகள்

4 விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கிற்கான படகுகள்

5 சுற்றுலாப் பிரயாணப் படகுகள் 6 பாதுகாப்புக்கான படகுகள்

40 படகு கட்டும் தொழில் இடம்பெறும் பிரதேசங்கள் எவை?

பேருவளை, களுத்துறை, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்குளி,

திருகோணமலை

செல்வச்சந்திரன்

41 படகு கட்டும் தொழிலோடு தொடர்புடைய பிரச்சினைகள் எவை?

1 உள்ளீட்டுப் பொருட்களுக்கான செலவு அதிகமாகக்

காணப்படுதல்.(மூலப்பொருள், வலு)

2 தொழில்நுட்ப எபகரணங்களுக்கும், இயந்திரப் பகுதிகளை இறக்குமதி

செய்வதற்கும் அதிக மூலதனம் செலவு செய்யப்படுதல்.

42 படகு கட்டும் தொழிலின் போக்குகள் எவை?

1 கேள்வி அதிகரித்துச் செல்லல்.

2 தொழில்நுட்ப ரீதியான உபகரணங்களை உள்ளடக்கி உயர்தரமான

படகுகளை உற்பத்தி செய்தல்.

3 பல்வேறு தேவைகளுக்கும் பல்வேறு வடிவங்களில் படகுகள் கட்டப்படுதல்.

www.lkedu.lk

உணவு மற்றும் பான வகைகளின் உற்பத்திக் கைத்தொழில்

43 உணவு மற்றும் பான வகைகளின் உற்பத்திக் கைத்தொழிலின் பண்புகள் எவை?

1 ஏராளமான முதலீட்டாளர்கள் காணப்படுதல்.

2 சிறிய, நடுத்தர அளவிலான கைத்தொழில் நாடு முழுவதும் பரவிக் காணப்படல்.

3 கைத்தொழில்களின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்துச் செல்லுதல்.

4 பொதிய செய்யப்பட்ட உணவு, பானங்களுக்கான கேள்வி அதிகரித்துச் செல்லுதல்.

44 உற்பத்திப் பொருட்களின் வகைகள் எவை?

குளிர்பானம், பழப்பானம், உடனடி உணவு, இனிப்புப் பலகாரம், பதப்படுத்திய இறைச்சி பிஸ்கட், பேக்கரி உற்பத்திகள், பாலுற்பத்திகள்

45 உணவு மற்றும் பான வகைகளின் உற்பத்திக் கைத்தொழிலின் பிரச்சினைகள் எவை?

1 மூலப்பொருள், வலுச்சகத்தி என்பவற்றில்ஏற்படும் விலை அதிகரிப்பால் உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரித்தல்.

சா.செல்வச்சந்திரன்

2 காலாவதியாகும் திகதி கறைவாக் இருப்பதனால் விற்பனையிலும், களஞ்சியப்படுத்தலிலும் சிரமங்கள் உள்ளமை.

3 வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களால் ஏற்படும் போட்டி.

4 பல்தேசியக் கம்பனிகளின் விளம்பரங்கள் காரணமாக சிறிய அளவு உற்பத்திகள் பாதிக்கப்படுதல்.

5 உணவுப் பண்டங்களை பழுதடையாமல் பாதுகாக்கவும், சுவையூட்டவும் இரசாயனப் பொருட்கள் கலப்பதால் ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகள்.

46 உணவு மற்றும் பான வகைகளின் உற்பத்திக் கைத்தொழிலின் போக்குகள் எவை?

1 உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி அதிகரித்தல்.

2 சிற்றளவு, மற்றும் குடிசைக் கைத்தொழில்களின் உற்பத்தி அதிகரிப்பு

3 நுகர்வோரைக் கவரும் வகையில் பல்வேறு வகையான பொதியமைப்பு முறைகளும், விளம்பரங்களும்.

4 பல்வேறுபட்ட உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றமை.

www.lkedu.lk

குடிசைக்கைத்தொழில்

47 குடிசைக் கைத்தொழில் என்றால் என்ன?

சிறிய முதலீட்டுடன் பெரும்பாலும் குடும்ப உழைப்பை வழங்கி வீட்டிற்குள் அல்லது அதற்கு கிட்டிய இடத்தில் மேற்கொள்ளப்படும் கைத்தொழிலாகும்.

48 குடிசைக் கைத்தொழிலின் பண்புகள் எவை?

1 கையால் இயக்கும் சிறிய இயந்திரங்களைக் கொண்டிருத்தல்.

2 மின்சாரத்தால் இயங்கும் சிறிய இயந்திரங்கள் காணப்படுதல்.

3 பாரம்பரிய நுட்பங்களைக் கொண்டிருத்தல்.

4 உள்ளூர் கலை, கலாசாரம், பாரம்பரியங்கள், மரபுகள் என்பவற்றை பிரதிபலித்தல்.

49 குடிசைக் கைத்தொழிலின் உற்பத்திகள் எவை?

1 கைத்தறி நெசவு

2 தும்புடன் தொடர்புடைய உற்பத்திகள்

3 பதனிடப்பட்ட உணவு உற்பத்திகள்

4 அலங்காரப் பொருட்கள்

5 மட்பாண்ட உற்பத்திகள்

6 பித்தளைப் பொருட்கள் உற்பத்தி

நா.செல்வச்சந்திரன்

50 குடிசைக்கைத்தொழிலுக்கு பிரசித்தி பெற்று விளங்கும் இடங்கள் எவை?

பிலிமத்தலாவ - பித்தளைப் பொருட்கள்

மொரட்டுவ - தளபாட உற்பத்தி

ரடவடுன்ன - பிரம்பு வேலைகள்

அம்பலாங்கொட – முகமூடி

காலி, கொக்கலை – றேந்தை பின்னல். சேலைக்கரை

www.lkedu.lk

51 குடிசைக்கைத்தொழிலின் விரத்திக்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் எவை?

1 திவிநெகும தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டம்

2 கைப்பணிப் பொருட்களுக்கான கிராமங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை

3 தொழிலாளர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம்

4 கண்காட்சிகளை நடாத்துவதன் மூலம் உற்த்தியாளர்களை ஊக்குவித்தல்

52 குடிசைக்கைத்தொழிலோடு தொடர்புடைய பிரச்சினைகள் எவை?

1 மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் பிரச்சினை

2 பாரம்பரிய தொழில்களைப் பாதுகாப்பதில் தொழிலாளர்கள் பற்றாக்குறையாக இருத்தல்.

3 உற்பத்திச் செலவு அதிகரித்தல்.

4 உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் பிரச்சினை காணப்படுதல்.

5 பாரம்பரிய உற்பத்திக்குச் சமனான பொருட்களின் இறக்குமதியால் பாதிப்பு ஏற்படல்.

53 குடிசைக்கைத்தொழிலின் போக்குகள் எவை?

செல்வச்சந்திரன்

1 மத்திய அரசினால் உள்ளூர், பிரதேச மட்டங்களில் ஒத்துழைப்பு வழங்கப்படுதல்.

2 சுற்றுலாக் கைத்தொழிலின் விருத்தியால் கேள்வி அதிகரித்துள்ளமை.

3 அரச அனுசரணையுடன் சந்தை வாய்ப்புக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளமை.

4 மனித உழைப்புடன் சிறிய இயந்திரங்களின் பயன்பாடு விருத்தியடைந்துள்ளமை.

சுற்றுலாக் கைத்தொழில்

54 இலங்கை சுற்றுலாக் கைத்தொழிலிலின் சிறப்புக்குக் கொண்டுள்ள பண்புகள் எவை?

மரபுரிமை, சூழல் மரபுரிமை, உபசரிக்கும் பாரம்பரியம், கருணை போன்ற பண்புகள்

www.lkedu.lk

55 இலங்கை சுற்றுலா அதிகார சபையினால் இனங்காணப்பட்டுள்ள முக்கிய சுற்றுலா வலயங்கள் எவை?

1 கொழும்பு நகரம்

2 கொழும்பு பெருநகரப் பிரதேசம்


3 மத்திய மலைநாடு

4 தென் கரையோரப் பிரதேசம்

5 கிழக்குக் கரையோரப் பிரதேசம்

6 பழைய நகரங்களை உள்ளடக்கிய வலயம்

7 வட பிரதேசம்



www.lkedu.lk

56 சுற்றுலாக் கைத்தொழில் தொடர்பான பிரச்சினைகள் எவை?

1 செல்வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருத்தல்.

2 சுற்றுலாப் பயணிகளின் வருகை வருடத்தின் குறிக்கப்பட்ட காலப்பகுதியில் மட்டும் இடம்பெறுதல்.

3 சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படும் சேவையின் தரம் எல்லா வலயங்களிலும் சமமாக அமையாமை.

4 சமூக, கலாசாரச் சூழலின் மீது சுற்றுலாக் கைத்தொழில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றமை.

57 சுற்றலாக் கைத்தொழிலின் போக்குகள் எவை?

1 சுற்றலாக் கைத்தொழிலின் வசதிகளில் விரிவான அபிவிருத்தி.

2 நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்புக்கள் கிடைக்கின்றமை.

3 சுற்றுலாவும் விருந்தோம்பலம் வர்த்தகத்திற்காக தேவைப்படும் திறன் வாய்ந்த தொழிலாளர்களை உருவாக்குவதில் பல்கலைக்கழகங்களும், நிறுவனங்களும் கவனத்தை செலுத்துகின்றமை.

செல்வச்சந்திரன்

4 பாரம்பரிய சுற்றுலாவில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை.

58 இலங்கையின் பொருளாதாரத்தில் கைத்தொழில் பங்களிப்புச் செய்யும் மூன்று துறைகளும் எவை?

1 மொத்தத் தேசிய உற்பத்தி

- 2012ஆம் ஆண்டு மொத்த தெசிய உற்பத்தியில் கைத்தொழில் துறை 31.4வீதமாக உள்ளது. (சேவைத்துறை 57.5வீதம்)

2 வேலை வாய்ப்புக்கள்

- வேலை வாய்ப்பில் 2.1 சதவீதம் பங்களிப்புச் செய்துள்ளது.

3 வெளிநாட்டு செலாவணி வருமானம்

- ஏற்றமதி வருமானத்தில் 75.4 சதவீதம் கைத்தொழிலினால் பெறப்பட்டுள்ளது.
- நெசவுப் பொருட்களும் ஆடைகளும் 41 சதவீதமான பங்களிப்புச் செய்கின்றது.

www.lkedu.lk

அலகு 07

படங்களுக்கு ஓர் அறிமுகம் (பாடவேளை 16)

01 படம் என்றால் என்ன?

புவி பற்றிய புவியியல் தகவல்களைத் தட்டையான மேற்பரப்பில் அளவுத்திட்டத்தின் அடிப்படையில் எடுத்துக் காட்டுவதாகும்.

02 இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட படங்களுள் மிகப் பழமையான படத்தினை உருவாக்கியவர்கள் யார், அது எவ்வாறு வரையப்பட்டிருந்தது?

மொசப்பத்தேமியர்கள் (5000 வருடங்களுக்கு முன்னர்). தாம் வாழ்ந்த பிரதேசத்தைக் கட்டுவதற்கு பலகையொன்றில் களிமண்ணால் படத்தை அமைத்திருந்தனர்.

03 தற்பொழுது புவியியல் தகவல்களை படமாக்குவதற்குப் பயன்படும் நுட்பமுறைகள் எவை?

1 பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமை (GPS)

2 புவியியல் தகவல் முறைமை(GIS)

3 தொலை உணர்வு (RS)

நா.செல்வச்சந்திரன்

04 படங்களில் காட்டப்படும் விடயங்கள் எவை?

1 பௌதிக அம்சங்கள்

2 பண்பாட்டு அம்சங்கள்

3 கோள்கள்

4 புவியின் உட்பாகம் பற்றிய தகவல்கள்

4 அகலக்கோடுகள் 5 நெடுங்கோடுகள்

05 இடவிளக்கப்படத்தின் பிரதான அம்சங்கள் எவை?

1 அளவுத்திட்டத்திற்கேற்ப தரைத்தோற்றத்தினைச் சுருக்கிக் காட்டுதல்.

2 அமைவிடம் மற்றும் திசையினை மிகத் துல்லியமாகக் காட்டுதல்

3 இடஞ்சார் தகவல்களை அதிகளவில் முன்வைத்தல்

4 படங்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு நிறங்கள், குறியீடுகளைப் பயன்படுத்தல்

5 புவியின் மேற்பரப்பைப் பொதுமைப்படுத்தல்

www.lkedu.lk

06 படங்களின் வகைகள் எவை?

1 கருப்பொருட் படம் 2 இடவிளக்கப்படம்

கருப்பொருட் படம்

07 கருப்பொருட் படம் என்றால் என்ன?

ஒரு குறிப்பிட்ட விடயம் பற்றிய தகவல்களை மாத்திரம் முன்வைப்பதற்கு அமைக்கப்படும் படமாகும்.

08 கருப்பொருட் படங்களின் பயன்பாடுகள் எவை?

1 படத்தின் மூலம் காட்டப்படும் தகவல்கள் இலகுவாகக் காணப்படுவதால் சுலபமாக விளங்கிக் கொள்ளலாம்.

2 பல்வேறு வகையான கருப்பொருட் படங்களை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

3 திட்டமிடலில் கருப்பொருட் படங்களின் பயன்பாடு உண்டு

4 பிரதேச, இடம் சார்ந்த அல்லது பரப்புப் பங்குகள் பற்றி நன்கு விளங்கிக் கொள்வதற்கான திறனைக் கொண்டிருத்தல்.

09 கருப்பொருட் படங்களின் வகைகள் எவை?

வகை	உள்ளடக்கம்
பௌதிக அம்சங்களைக் காட்டும் கருப்பொருள்	புவிச்சரிதவியல் தெசப்படம், தரைத்தொற்ற தேசப்படம், மண் தெசப்படம், நீரியல் தேசப்படம்
நிர்வாகக் கருப்பொருள் படம்	அரசியல் பிரிவுகளைக் காட்டும் படம், மாகாணத் தேசப்படம், மாவட்டத் தேசப்படம்
நிலப்பாயன்பாட்டு கருப்பொருட் படம்	பயிர்ச்செய்கை, குடியிருப்பு
சனத்தொகை கருப்பொருட் படம்	குடிப்பரம்பல், குடி அடர்த்தி
வரலாற்று கருப்பொருள் படம்	புராதன நாகரிகப்படம், நாடுகாண் பயணப்படம், புராதன நகரங்களைக் காட்டும் படம்
செய்மதிக் கருப்பொருட்படம்	விமான ஒளிப்படங்கள், செய்மதிப் படங்கள்

ஏ. செல்வச்சந்திரன்

www.lkedu.lk

இடவிளக்கப்படம்

10 இடவிளக்கப்படம் என்றால் என்ன?

பௌதிகப் பண்பாட்டு அம்சங்களை உள்ளடக்கி திசை, அளவுத்திட்டம், அமைவிடம் போன்ற தேசப்பட அடிப்படைகளைப் பிரயோகித்து அமைக்கப்பட்ட படமாகும்.

11 இடவிளக்கப்படங்களின் பண்புகள் எவை?

1 குறிப்பிட்ட பகுதி ஒன்றின் பல்வேறுபட்ட இடவிளக்கவியல் அம்சங்களை எடுத்துக்காட்டல்.

2 சமவுயரக் கோடகளைப் பயன்படுத்தித் தரைத்தொற்ற அம்சங்களைக் காட்டுதல்.(மலைகள், பள்ளத்தக்குகள், சுவடுகள்)

3 பண்பாட்டு அம்சங்களையும், பௌதிக அம்சங்களையும் காட்டுவதற்கு நிறங்களையும் நியமக் குறியீடுகளையும் பயன்படுத்தல்.

12 இடவிளக்கவியல் படங்களின் பயன்பாடுகள் எவை?

1 பௌதிக அம்சங்கள் மற்றும் அவற்றின் இடைத்தொடர்புகளை விளங்கிக் கொள்வதற்கான ஆற்றல்.

2 தரைத்தொற்றத்திற்கும் வடிகால் அமைப்புகளுக்குமிடையில் காணப்படும் தொடர்புகளை விளங்கிக் கொள்ளும் ஆற்றல்.

3 பௌதிக அம்சங்களுக்கும் மனித நடவடிக்கைகளுக்கும் இடையிலான தொடர்புகளை தெளிவுபடுத்துதல்.

13 இடவிளக்கவியல் பட அளவுத்திட்டங்களில் முக்கியமான'த எது? 1:50,000(நடுத்தர அளவு)

14 இவ்வளவுத் திட்டத்தின் அடிப்படையில் சமவுயரக் கோடுகளின் இடைவெளி எவ்வளவு?

20மீ

15 இலங்கையின் ஆகக்கூடிய நீளம் எவ்வளவு?

432 கிலோ மீற்றர்(பருத்தித்துறை முனை – தெய்வேந்திரமுனை)

16 இலங்கையின் ஆகக்கூடிய அகலம் எவ்வளவு?

244 கிலோ மீற்றர் (கொழும்பு – சங்கமன் கந்த முனை)

செல்வச்சந்நிதி

www.lkedu.lk

17 1:50, 000 அளவுத்திட்ட முறையைக் குறிப்பிடுக?

1cm = 50000cm

1 cm = 500 m

1cm = ½ km

1X2 = ½ X 2

2cm = 1 km (நிலத்தில் ஒரு கிலோமீற்றர் தூரம் படத்தில் 2 சென்ரிமீற்றர்களாகக் குறிக்கப்படும்)

நீளம் = 432 X 2 = 864 cm அகலம் = 224 X 2 = 448 cm

இவ்வாறான பாரிய அளவுத்திட்டத்தை இலகுவாக்குவதற்கு இலங்கையை 92 படத்தாள்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு படத்தாளும் 40 கிலோ மீற்றர் நீளமும் 25 கிலோ மீற்றர் அகலமும் கொண்டதாக அமையும்.

எனவே ஒரு படத்தாளின் பரப்பளவு = நீளம் X அகலம்

= 40km X 25km

= 1000km^2

1: 50000 அளவுத்திட்டத்திற்கேற்ப படமாக்கப்பட்ட பகுதியின் பரப்பளவு

= நீளம் X அகலம்

40km X 2 X 25km X 2

= 80cm X 50 cm


= 4000cm^2

நா.செல்வச்சந்திரன்

படத்தின் பரப்பளவுப் பகுதி (181)

www.lkedu.lk

18 இடவிளக்கப்படத்தின் மாதிரியை வரைந்து காட்டுக.



19 1:5[illegible]?

விடயம்	வகை	உள்ளடக்கம்
படத்தின் முகப்பிலுள்ள தகவல்கள்	பௌதிக அம்சங்கள்	நிலவுருவங்கள், ஆறுகள், காடுகள், புல்நிலங்கள், பற்றைக்காடுகள்,
	பண்பாட்டு அம்சங்கள்	நிர்வாக எல்லைகள், வீதிகள், குடியிரப்புக்கள், பயிரிடப்பட்ட நிலங்கள்
புற எல்லைத் தகவல்கள்	வெளி எல்லைகளின் மெல் ஓரம்	A – படத்தின் வகை B – படத்தின் பெயர் C – படத்தின் இலக்கம்
	வெளி எல்லைகளின் கீழ் ஓரம்	அளவுத்திட்டம், திசை, அருகிலுள்ள படங்களை காட்டும் வரைபடம், நிர்வாக எல்லைகளைக் காட்டும் வரைபடம்

20 அகலக் கோடுகளின் அடிப்படையில் இலங்கையின் அமைவிடம் யாது $5^0\ 55' - 9^0\ 51'$

21 நெட்டாங்கு அடிப்படையில் அமைவிடம் $79^0\ 42' - 81^0\ 52'$

22 அகல, நெட்டாங்குகளின் அளவுத்திட்டம் $1^0 = 60$ கலை(60') , 1 கலை = 60விகலை(60'')

23 1:50,000 அளவுத்திட்டத்தில் அகல, நெடுங்கோடுகள் எத்தனை கலை இடைவெளியில் குறிப்பிடப்படும். 5 கலை


24 இடவிளக்கவியல் படத்தில் காணப்படும் அடிப்படை அம்சங்கள் எவை?

திசை, அளவுத்திட்டம், அமைவிடம், நிறங்களும் குறியீடுகளும், தலைப்பு

25 இடவிளக்கவியல் படத்தில் காட்டப்படும் திசை எது? வடக்கு

www.lkedu.lk

26 1.50,000 படங்களில் காட்டப்படும் திசைகள் எவை?



உண்மை வடக்கு (TN)
காந்த வடக்கு (MN)
அளியடைப்பு வடக்கு (GN)

உண்மை வடக்கு :- நட்சத்திர அடையாளம் ஒன்றுடன் முடிவடையும்.புவியியல் வடக்கு எனவும் அழைக்கப்படும். பூகோளத்தில் வடக்கு மனைவு அமைவு பெற்றிருக்கும் திசையைக் காட்டும்.

காந்த வடக்கு :- புவியின் காந்தப்புலத்தினை அடிப்படையாகக் கொண்டு காணப்படும்.அம்புக்குறியன் அரைவாசியுடன் முடிவடையும்.

அளியடைப்பு வடக்கு :- முழுமையான அம்புக்குறி ஒன்றுடன் குத்தாகக் காணப்படும் கோட்டினால் காட்டப்படும். உண்மை வடக்கிற்கும் அளியடைப்பு வடக்கிற்கும் இடையே 3^0 கோண வேறுபாடு காணப்படும்.


27 1:50,000 அளவுத்திட்டம் காட்டப்படும் இரண்டு முறைகளும் எவை?

1 நேர்கோட்டு அளவுத்திட்டம் 2 விகைக்குறிப்பின்ன அளவுத்திட்டம்

28 நேர்கோட்டு அளவுத்திட்டம் என்றால் என்ன?

கோட்டின் மீது அளவுத்திட்டம் அமைக்கப்படும் போது நெர்கொட்டு அளவத்திட்டம் எனப்படும்.

29 நேர்கோட்டு அளவுத்திட்டத்தை வரைந்து காட்டுக.



30 நேர்கோட்டு அளவுத்திட்டம் வரையப்படும் படிமுறைகள்

1 10 சென்ரி மீற்றர் நீளமுடைய கோடு ஒன்றை வரைதல்.

2 அதனை 2 சென்ரி மீற்றர் கொண்ட பகுதிகளாகப் பிரித்தல்.

3 முதல் 2 சென்ரி மீற்றர் தவிர்த்து ஏனையவற்றிற்கு 0,1,2,3,4 என இலக்கமிடுதல்.

4 பூச்சியத்திலிருந்து இடது பக்கமாக 1 என இலக்கமிடுக.

www.lkedu.lk

5 0 இற்கும் 1 இற்கும் இடையிலன பகுதியை 2 மில்லி மீற்றர் கொண்ட 10 உப தொகுதிகளாகப் பிரிக்க

6 கோட்டின் இரண்டு பக்க ஓரங்களிலும் km எனக் குறிப்பிடுக.

31 தூரத்தைக் கணித்தலுக்கு உதாரணம் தருக.

10 சென்ரி மீற்றர் நீளமான வீதியின் நீளம் - 5 கிலோ மீற்றர் (2cm = 1km)

7 கிலோ மீற்றர் வீதி படமாக்கும் போது - 14 சென்ரிமீற்றரில் காட்டப்படும்.

32 இடவிளக்கவியல் படத்தில் குறியீட்டு விளக்கம் காட்டப்படும் தலைப்புக்கள் எவை?

1 எல்லைகளின் வகைகள் 2 சுற்றுலாத் தகவல்கள் 3 வடிகால்கள்

4 தரைத்தோற்றம் 5 தாவரப் போர்வை 6 ஏனைய அம்சங்கள்

7 வீதிகள் மற்றும் அதனுடன் இணைந்த அம்சங்கள்

33 நிறங்களும் அவற்றினால் குறிக்கப்படுபவையும்

நிறம்	குறிப்பிபடப்டுபவை
நீலம்	ஆறுகள், குளங்கள், கால்வாய்கள், கடல்கள் போன்ற நீருடன் தொடர்புடையவை
மஞ்சள்	எல்லா வகையான வீட்டுத் தோட்டங்கள், சிறுவீதி
மஞ்சள் நிறப் பின்னணியில் ஒவ்வொரு பயிருக்குமுரிய குறியீடு பச்சை நிறத்தில் காட்டப்படும்.	
பச்சை	நெற்செய்கை
சிவப்பு	பிரதான வீதிகள், நிர்வாக எல்லைகள், புகையிரத நிலையங்கள், பாடசாலைகள், நீதிமன்றங்கள்
கறுப்பு	புகையிரதப்பாதை, பாறை வெளியரும்பு, பாதுகாக்கப்பட்ட காடுகளின் எல்லை.
கபில நிறம்	குளங்களின் அணை, சமவுயரக் கோடுகள்.

நா.செல்வானந்திரன்


34 பண்பாட்டு அம்சங்கள் என்றால் என்ன?

மனிதனின் தலையீட்டினால் பௌதிக சூழலின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ள அனைத்தும் பண்பாட்டு அம்சங்களாகும்.

பண்பாட்டு அம்சங்கள்


1:50,000 இடவிளக்கவியல் படத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பல பண்பாட்டு அம்சங்கள் கற்பதற்கு தரப்பட்டுள்ளன.

- மாவட்ட எல்லை
- அதிவேக நெடுஞ்சாலைகள்




www.lkedu.lk

1 நிர்வாக எல்லைகள்




2 சுற்றுலா தகவல்களும், ஏனைய அம்சங்களும்



www.lkedu.lk

3 வீதிகள்



4 புகையிரதப் பாதை

5 நீர்ப்பாசனக் கால்வாய்